www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

16-30 ஏப்ரல் '88

3 - 11

விலை: ரூ. 1

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு




## 'மகா அலெக்சாண்டர்' பராக்...! பராக்....!!

படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

ஆசிரியர்
'புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை-600 015.

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

✱ மாசி மாதத்து புதிய ஜனநாயகத்தில் வெளியான 'புனிதம் எங்கே போனது?', 'சட்டமன்ற ரௌடித்தனங்கள் என்ற கட்டுரைகளிலிருந்து எங்களுக்குத் தெரியாத பல அரிய விசயங்களைப் பெற்றுக் கொண்டேன். சட்டமன்றமென்றால் எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்த்தேனோ அதை நீங்கள் சுக்குநூறாக உடைத்து அதன் அசிங்கங்களையெல்லாம் எனக்கும் எம் தமிழ் உலகிற்கும் எடுத்துரைத்துள்ளீர்கள். இதுபோன்ற செய்திகள் மேலும் வெளியிடக் கோருகிறேன்.

**ஞானவாசன்**
**கவிட்சர்லாந்து**

✱ ஆரம்பத்தில் எங்கள் பகுதிக்கு 10 பிரதிகள் மட்டுமே வந்து கொண்டிருந்த புதிய ஜனநாயகம் இன்று அதைவிட பல மடங்கு பிரதிகளைத் தருவிக்குமளவுக்கு வாசகர்களைப் பெற்றுள்ளது. புதிய ஜனநாயகத்தை அறிமுகப்படுத்திய எமது பகுதித் தோழரின் அயராத உழைப்பும், புரட்சிகர நடைமுறையிலிருந்து கிஞ்சித்தும் தடம் புரளாமல் புதிய ஜனநாயகத்தில் வெளிவரும் படைப்புகளும்தான் இதற்குக்காரணம். மார்க்சிய- லெனினிய- மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடிக்கும் அமைப்புகளுக்கும் தோழர்களுக்கும் வாளும் கேடயமுமாகத் திகழும் புதிய ஜனநாயகம் இப் புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேற புரட்சி வாழ்த்துக்கள்!

**சந்திரமோகன்**
**ஊற்றங்கரை**

✱ மார்ச் 16-31 இதழில் வெளியான பண நாயகமே வெல்லும் என்ற கட்டுரை ஓட்டுக் கட்சிகளின் உண்மைச் சொரூபத்தை உரித்துக் காட்டி விட்டது. உயிர்க் கொல்லி வியாபாரமான குடும்பக்கட்டுப்பாடு திட்டம் உழைக்கும் மக்களுக்கு எதிரான திட்டம் என்பதை நடைமுறையிலிருந்து எடுத்து சிறப்பாக விளக்கியுள்ளீர்கள்.

**முகம்மதுகாலித்**
**மதுரை**

✱ 'ஒரு கம்யூனிசத் துரோகியின் மரண சாசனம்' ஓர் அருமையான வரலாற்றுத் தொடர். நீதிக் கட்சியினர் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகசீலர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளவில்லை. வெள்ளைக்காரர்கள் போனால் வடநாட்டுப் பார்ப்பனியக் கொள்ளையர்கள்தான் ஆட்சிக்கு வருவார்கள்; அதற்கு வெள்ளைக்காரன் ஆட்சியே பரவாயில்லை என்று பெரியார்கூட எண்ணினார். ஆனால் காந்தியும் காங்கிரசுகாரர்களும் செய்த தேசத் துரோகங்கள் மறைக்கப்பட்டு அவர்கள் தேசத் தந்தையாகவும், மாபெரும் விடுதலைப் போராட்ட வீரர்களாகவும் காட்டப் படுகிறார்கள். பகத்சிங் போன்றோரின் தியாகங்களை திட்டமிட்டே இருட்டடிப்பு செய்து விட்டனர். பார்ப்பனிய காங்கிரசு கும்பலின் இந்த மோசடிக்கு வக்காலத்து வாங்கும் போலி கம்யூனிஸ்ட் தலைவர் பி. ராமமூர்த்தியின் முகத்திரையை தொடர்ந்து கிழித்தெறியுங்கள்.

**இரத்தினவேலு**
**நெய்வேலி**

✱ மார்ச் 1-15 இதழில் கடல ங்குடியில் போலீஸ் நடத்திய வெறியாட்டத்தைப் பிரசுரித்த உங்களுக்கு என் நன்றி. நீங்கள் கையளவு அராஜகத்தைத்தான் எழுதியுள்ளீர்கள். ஆனால் கடலளவு நடந்துள்ளது. அப்பாவிகளைக் கைது செய்து இழுத்துச் சென்ற போலீஸார் குடவாசல் போலீஸ் ஸ்டேஷனில் 36 மணி நேரம் பட்டினி போட்டனர். தாகத்தால் தவித்தவர்களுக்கு மூத்திரத்தைக் குடிக்கச் சொல்லி மனிதாபிமானத்தோடு ஆலோசனை கூறினர். பெண்களை நடுத்தெருவில் மானபங்கப்படுத்தியதோடு வீடு புகுந்து நகைகளையும் சூறையாடி விட்டனர். சட்டபூர்வ சமூக விரோதக் கும்பல்தான் போலீசு என்பதை கடலங்குடி மக்கள் இப்போது ஆழமாக உணர்ந்திருக்கிறார்கள்.

**புரட்சிசூரன்**
**கடலங்குடி**

✱ உழைக்கும் மக்கள் மீதான பொருளாதார தாக்குதலை தவணை முறையில் தொடுக்கும் பாசிச கும்பலின் சதிகளை மார்ச் 1-15 இதழின் தலையங்கம் தெளிவாக அம்பலப்படுத்திக் காட்டியது. நாடாளுமன்ற ஜனநாயகம் செல்லாக் காசாகி விட்டபோது, கவர்ச்சி வாதமும் பொறுக்கி அரசியலும் அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொள்வதை பொறுக்கி அரசியல் எனும் கட்டுரை அழகாகப் படம் பிடித்துக் காட்டியது. மானத்திற்கஞ்சி சாவதை விட மானத்தோடு போராடுவதே சாலச் சிறந்தது என முடிவெடுத்த ஈழச் சகோதரிகளின் போர்க் குணம் எங்கள் உணர்வுகளில் புது ரத்தம் பாய்ச்சுகிறது. சிறப்பாகவும் எடுப்பாகவும் செய்திகளை வெளியிடும் புதிய ஜனநாயகம் 'பாரத் பந்த்' பற்றி முன்கூட்டியே எழுதாததை கடுமையாக விமர்சிக்கிறோம்.

**வாசகர் வட்டம்**
**நெய்வேலி-வடலூர்**

✱ போலிக் கம்யூனிஸ்டுகளை நமது இதழ் தொடர்ந்து அம்பலப்படுத்துவதைக் கண்டு ஆத்திரமுற்ற அவர்கள் நம்மை 'அமெரிக்காவின் ஏஜெண்டுகள், இளைஞர்களை தீவிரவாதப் பாதையில் இழுத்துச் சென்று சீரழிப்பவர்கள், துரோகிகள்' என்றெல்லாம் அவதூறு செய்கின்றனர். அரசியல் சித்தாந்த ரீதியாக நம்மை நேருக்குநேர் சந்திக்கத் துணிவில்லாத இப்பேடிகளின் முகத்தில் அறைவது போல ஒரு கட்டுரை வெளியிடுங்கள்.

**கணேஷ்**
**—கம்பம்**

### அறிவிப்பு

புதிய ஜனநாயகம் சந்தாதாரர்கள் மற்றும் முகவர்கள், தாங்கள் அனுப்பும் பணவிடைகளின் அடிக்கட்டையில் தங்கள் முகவரியையும், அனுப்பும் தொகையையும் தெளிவாக குறிப்பிட்டு எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அடிக்கட்டையில் எந்த ஒரு விபரமும் இல்லாமலோ, அவசரத்தில் சரிவர விபரங்களை எழுதாமலோ சிலர் பணம் அனுப்புகின்றனர். இதனால் அத் தொகையை யார் அனுப்பினார்கள் என்ற விபரம் புரியாமல், குறிப்பிட்டவர்களின் கணக்கில் உடனடியாக வரவு வைப்பது முடியாமல் போகிறது. இதை கவனத்தில் கொண்டு எங்களுக்கு உதவுமாறு தாழ்மையுடன் கோருகிறோம்.

ஆசிரியர் குழு.
புதிய ஜனநாயகம்.

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

சென்ற இதழில் வெளியான ''ஈழம்: துரோகத்தை நோக்கி?!....'' என்ற கட்டுரையில், 5ம் பக்கம் இரண்டாவது பாரா 11வது வரி, ''பிராந்தியம் மேலதிகாரம் பெறுவது என்ற எங்களை இந்தியாவிற்கு...'' என்றிருப்பதை, ''பிராந்திய மேலதிகாரம் பெறுவது என்ற இந்தியாவின் கருத்தோட்டத்தை நாங்கள் கௌரவிக்கத் தயாராக இருக்கிறோம்; இந்தச் சூழ்நிலையில் எங்களை இந்தியாவிற்கு...'' என திருத்தம் செய்து வாசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். கட்டுரையின் சாராம்சமாக உள்ள இம்முக்கியமான வரி எமது கவனக் குறைவால் விடுபட்டுப் போனதற்கு மிகவும் வருந்துகிறோம்.

**—ஆசிரியர் குழு.**
**புதிய ஜனநாயகம்.**



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய
அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

11

16-30 ஏப்ரல் '88

உள்நாடு
தனி இதழ் : ரூ. 1
ஆண்டு சந்தா : ரூ 24

வெளிநாடுகள்
(விமானத் தபாலில்)

தனி இதழ் : ரூ 6
ஆண்டு சந்தா : ரூ 144

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.

# நாற்காலி பிடிக்கு முன்னே நாய்ச் சண்டை!

ஊழல் புதை சேற்றில் சிக்கி மக்களிடமிருந்து தனிமைப்பட்டு அம்பலப்பட்டுக் கிடக்கும் பாசிச ராஜீவ் கும்பலை அதிகாரத்திலிருந்து வீழ்த்தவும், மக்களது அதிருப்தியைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் ஆட்சிக்கு வரவும் எதிர்க்கட்சிகள் துடிக்கின்றன. மிருக மெஜாரிட்டி கொண்ட ஆளும் காங்கிரசுக்கு தேசிய மாற்றாக, சிதறிக் கிடக்கும் எதிர்க் கட்சிகள் ஒரு நெல்லிக்காய் மூட்டையாக ஒன்று சேர்வதற்கான முயற்சிகள் வேகமாக நடந்தேறி வருகின்றன. ஒரு வேளை ஒரே கட்சியாக ஐக்கியப்பட சாத்தியமில்லா விட்டாலும் அந்தந்தக் கட்சிகள் தங்கள் தனித்தன்மையைப் பின்பற்றிக் கொண்டு ஒரு சமஷ்டி கூட்டமைப்பாக ஒன்று படுவது; அதை தேசிய மாற்றாக நிறுவுவது என்றும் எதிர்க் கட்சிகள் ஐக்கியத்திற்கான முயற்சிகள் மார்ச் மாத இறுதியில் மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியது.

தங்கள் குறுகிய நோக்கங்களுக்கேற்ப ஆளுக்கொரு பாதையில் ஐக்கியத்தை நிறுவ அவரவர்கள் முயற்சித்தார்கள். ஜனதா தலைவர் சந்திரசேகர், சரண்சிங் மகன் அஜித் சிங்கைத் தலைவராகக் கொண்ட லோக்தள கட்சியையும், மாண்டுபோன பாசிச இளவரசன் சஞ்சய் காந்தியின் மனைவியைத் தலைவராகக் கொண்ட மேனகா கட்சியையும் ஜனதாவுடன் சேர்க்கும் தீவிர முயற்சியில இறங்கினார். மறுபக்கம் அரியானாவின் லோக்தள (பி) கட்சி முதல்வர் தேவிலாலும் கர்நாடக ஜனதா முதல்வர் ஹெக்டேயும், சந்திரசேகர்-அஜித்சிங் கும்பலைக் கழட்டிவிட்டு விட்டு வேறு திசையில் பெரிய கூட்டணியை நிறுவும் முயற்சியில் இறங்கினர். ஜனதா, லோக்தளங்கள், வி.பி. சிங் கட்சி, காங்கிரஸ் (எஸ்) ஆகிய ஐந்து கட்சிகளை ஒரே கட்சியாக ஐக்கியப் படுத்துவது, இக்கட்சிக்கு வி.பி.சிங்கைத் தலைவராகப் போடுவது, ஏப்ரல் 5ல் துவங்கும் இப்புதிய தேசிய மாற்று கட்சிக்கு 'தேசிய மக்கள் கட்சி' என பெயர் சூட்டுவது, ஜனதா தேர்தல் சின்னத்தைப் பயன்படுத்துவது என்ற திட்டத்தை அறிவித்தனர். இதை மற்ற கட்சிகளும் ஏற்பதாக அறிவித்தன.

தனது திட்டப்படி அல்லாமல், ஐக்கியத்திற்கான முயற்சிகள் நடைபெறுவதைக் கண்டு எரிச்சலடைந்த சந்திரசேகர், ஹெக்டேவுக்கு எதிராக ஜனதா கட்சியிலுள்ள தனது விசுவாசிகளை ஏவிவிட்டார். அதன் படி கர்நாடக நீர்ப்பாசன மந்திரி தேவகவுடா தலைமையில் ஏழு மந்திரிகளும் 50 க்கும் மேற்பட்ட எம். எல்.ஏக்களும் ஹெக்டேவுக்கு எதிராகக் கலகக் கொடி தூக்கினர்.

எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைக்கு முன் கர்நாடக ஜனதா கட்சியே உடைந்து போகும் நிலைக்குத் தள்ளப்பட்டது. ஹெக்டே ஆட்சி நீடிக்குமா என்பதே கேள்விக் குறியானது. பின்னர் சமரசங்கள், சரிக்கட்டலைத் தொடர்ந்து தேவகவுடா பதவிவிலக, எப்படியோ ஹெக்டே ஆட்சி மயிரிழையில் தப்பியது.

வாரிசு ஆட்சி முறையையும், சர்வாதிகாரத்தையும் எதிர்ப்பதாகக் கூறும் சந்திரசேகர், அஜித் சிங்கின் லோக்தளக் கட்சியையும், மேனகா கட்சியையும் தன்னிச்சையாக ஜனதாவுடன் இணைத்தார். அஜித்சிங்கை ஜனதாவின் தலைவராக்கினார்.

சந்திரசேகரின் ஒற்றுமைப் பாதைக்கு மாற்றாக வேறு திட்டத்தை வைக்கும் தேவிலாலும் இதே முறையில் தான் கட்சியையும் ஆட்சியையும் நடத்துகிறார். குறுகிய காலத்தில் அரியானாவில் தனது குடும்ப ஆட்சியை நிறுவியதோடு, சமீபத்தில் கட்சி மாறிய காங்கிரசு எம்.எல். ஏ.வை மூன்றே மணி நேரத்தில் தன்னிச்சையாக மந்திரியாக்கியுள்ளார். அதே வழியில் கட்சியையும் ஆட்சியையும் தனது குடும்ப கம்பெனியாக்கி அம்பலப்பட்டு நிற்கிறார் ஆந்திராவின் பாசிச முதல்வர் என்.டி.ஆர். தனிநபர் அகங்காரம், கோஷ்டி சண்டை வாரிசு ஆட்சி, கட்சியிலும் ஆட்சியிலும் எதேச்சதிகாரம், ஊழல், அரசு சலுகைகள் சன்மானங்களைப் பரவலாக்கிச் சூறையாடுவது, கருப்புச் சட்டங்களைப் போட்டு போராடும் மக்களை வெறிகொண்டு ஒடுக்குவது என்று இக்கட்சிகள் பாசிச ராஜீவ் கும்பலுக்கு சற்றும் சளைத்தவையல்ல.

ஐக்கியப் படுவதற்கான ஒரு சித்தாந்தக் கண்ணோட்டமின்றி, மாற்று அரசியல் பொருளாதார திட்டமின்றி, ஒன்றுபட அடிப்படையும் அருகதையுமற்ற இக்கட்சிகளால் பாசிச ராஜீவ் கும்பலை ஒரு போதும் வீழ்த்த முடியாது. பாட்டாளி வர்க்கக் கட்சியாலும் அதன் தலைமையின் கீழான புரட்சிகர அமைப்புகளாலும் மட்டுமே இதைச் சாதிக்கமுடியும். ●

படிப்பகம்

www.padippakam.com

# ‘மகா அலெக்சாண்டர்’ பவனி வருகிறார்

❝ பி.சி. அலெக்சாண்டர் இந்திராகாந்தியின் முக்கிய ஆலோசகர்களில் ஒருவராய் இருந்த அறிவாளி. இளைய பிரதமர் ராஜீவ்காந்தியின் அரசிலும் முக்கிய புள்ளியாக இருந்து செயல்படும் வழிகாட்டி பிரிட்டனில் இந்திய தூதுவராக பணியாற்றிய ‘ராஜதந்திரி’. அதிகார வர்க்கத்துக்கே உரிய அதிகார திமிர், வீண் ஜம்பம் விளம்பரமோகம் அறவே இல்லாத நற்பண்பாளர். அதிகாரவர்க்க மேல்மட்டத்தில் இருக்கும் தனி சிறப்பான நபர்களில், முக்கியமானவர்களில் ஒருவர். சிக்கலானப் பிரச்சினையை நாசுக்காக கையாளும் திறமை, அறிவித்த திட்டங்களை செயல்படுத்துவதில் காட்டும் துடிப்பு, முடங்கிக் கிடக்கும் அரசுப் பணிகளை முடுக்கி விடுவதில் காட்டும் தீவிரம் ஆகியவற்றில் கவர்னர், அலெக்சாண்டருக்கு நிகர் அலெக்சாண்டர்தான். சுருக்கமாக சொன்னால், இருண்டு கிடந்த தமிழகத்திற்கு கிடைத்திருக்கும் ஒரு அகல் விளக்கு. ❞

கண்ணைப்பறித்து, காதைப் பிளக்கும் வானொலி; வானொளி விளம்பரங்களுடன், இப்போது தமிழக கவர்னர் அலெக்சாண்டரின் ‘மகாத்மியமும்’ மாவீரமும் சேர்த்து விளம்பரப்படுத்தப்படுகிறது. இப்‘புது’ சரக்கை ‘நடுநிலை’ ஏடுகளும் போட்டி போட்டுக் கொண்டு விற்பனை செய்கின்றன. போதாக் குறைக்கு நகர்ப்புறத்து ‘அறிவாளி’களும் தம் பங்குக்கு நடமாடும் ஒலிபெருக்கிகளாக செயல்பட்டு ரயில், பேருந்து பயணத்தின் போதும், பெட்டிக் கடைமுன் பொழுதைக் கழிக்கும் போதும் கவர்னர் ஆட்சியின் ‘மகாத்’மியங்களையும், ‘மாவீர’த்தையும் இலவசமாக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் யாவரும், திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் நடந்த அக்கிரமங்களை வெறுப்புடன் நினைவு கூர்ந்து, கவர்னர் ஆட்சியின் ‘மகாத்’மியங்களை பெருமையுடன் தூக்கி நிறுத்துகிறார்கள்

✱ அரசுப்பணிகளை முடுக்கி விடுவதின் முதல் கட்டமாக, சிவில் நிர்வாகம், மற்றும் போலீசு துறையின் 30க்கும் மேற்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை ஓரே நாளில் இடம் மாற்றம் செய்தது.

✱ முடிவெடுத்து செயல்படுத்தும் அதிகாரங்களை பல அதிகார மட்டங்களுக்கு பகிர்ந்தளித்து திட்டங்களை விரைவாக நிறைவேற்ற வழி செய்தது.

✱ ரேஷன் கடைகளிலும், பொது மருத்துவ மனைகளிலும், வருவாய் துறை அலுவலகம், தாலுக்கா அலுவலகம், போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்கும் இடங்களிலும் தலைவிரித்தாடிய, அதிகார முறைகேடுகள், லஞ்ச லாவண்யங்களை பறக்கும் படை அமைத்து கையும், களவுமாகப் பிடிப்பது, தண்டிப்பது;

✱ கள்ளமார்க்கெட், பதுக்கல் இவற்றில் சிக்கிக் கொண்டிருக்கும் நுகர் பொருட்களை திடீர் சோதனைகள் மூலம் வெளிக் கொணர்வது, குற்றவாளிடம் தண்டம் வசூலிப்பது;

✱ மதுரை, பழநி போன்ற பெரும் கோயில்களின் நிர்வாகத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர். அரசின் நியமனங்களை வெளியேற்றி அவ்விடத்தில் அதிகாரிகளை நியமித்தது.

✱ ஆசிரியர் வீட்டு வசதிவாரியம் முதல் சித்த வைத்திய வாரியம் உட்பட 9 வாரியங்கள், தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் முதல் தோல் அபிவிருத்தி கார்ப்பரேஷன் உள்பட 11 அரசுத் துறை நிறுவனங்கள், விவசாயிகள் உயர்நிலைக் கமிட்டி போன்ற 22 அமைப்புக்களின் தலைவர்கள் ஆக மொத்தம் 42 அ.தி.மு.கவின் பெருச்சாளிகள் குடியிருந்த இடத்தை சுத்தம் செய்ய தகுதி வாய்ந்த அதிகாரிகளை நியமித்தது.

✱ ஓட்டல் பண்டங்களின் விலையைக் குறைக்க (5 பைசா முதல் 10 பைசா வரை) நடவடிக்கை எடுத்தது. பெண்களை கேலிசெய்யும் பொறுக்கிகளை உடனுக்குடன் தண்டிப்பது.

✱ கூட்டுறவு அல்லாத தனியார் நெசவுத் தொழிலுக்கும் குறைந்த விலையில் கச்சா நூல் கிடைக்க வழிகண்டது.

அதிகம் போனால், நகர்புறத்து நடுத்தர வர்க்கம் மட்டுமே தொட்டறிந்து உணர்ந்து கொள்ளக்கூடிய, கவர்னர் ஆட்சியின் இந்த ‘மகாத்மி’யங்களை எங்கே பெரும்பான்மையான பாமர மக்கள் கண்டு கொள்ளாமல் விட்டு விடுவார்களோ என்று பயந்து ஓட்டு பொறுக்கிகளின் பாணியில், சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு தமிழகத்தை சுற்றி வருகிறார் அலெக்சாண்டர்.



ஒரு வேளை கஞ்சிக்கே வழியில்லாத கூலி ஏழைகளுக்கு, அப்படியே அரசு எந்திரம் விரைவாக செயல்பட்டாலோ அல்லது திறமையாக செயல்பட்டாலோ கூட அதனால் விடிவு ஒன்றும் பிறக்க போவதில்லை; தொல்லைகள் எதுவும் தீரப் போவதும் இல்லை. ஏனெனில் அரசு எந்திரத்தினுள் சென்று வருவதற்கு அவர்களுக்கு வேலை ஒன்றும் இல்லை. எனவே, மக்களின் குறைகளை நேரிடையாக கண்டறிவது, கேட்டறிவது, தீர்த்து வைப்பது என்பதாக பம்மாத்து செய்து கூடை கூடையாக மனுக்களை பெற்று வருகிறார் பயணத்தின் நடுவே, ஆங்காங்கே மக்கள் கூட்டத்தைக் கண்டவுடன் கீழ் இறங்கி அங்கேயும் மக்களின் குறைகளை கேட்டறிகிறார். அச்சாக, அப்படியே ஓட்டு பொறுக்கிகளின் பாணிதான்; தமிழ் மொழியின் மீதும், தமிழ் மண்ணின் தொன்மையான கலாச்சாரத்தின் மீதும் மாளாக்காதல் கொண்டு விட்டதாக விளம்பரப்படுத்திக் கொள்வது, பக்தி ரசம் சொட்ட மதப் பண்டாரங்களை தேடி ஓடுவது, தன் பிறந்தநாள் விழா போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்து தன்னை ஏற்றி போற்றும் எடுபிடிகளிடம் கொஞ்சிக் கொண்டே மறுபுறம் சுய விளம்பரங்களை அறவே வெறுப்பவராக நடிப்பது என ஒரு கைதேர்ந்த ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சி தலைவனுக்கே உரிய பம்மாத்து அரசியலில் படுத்து புரண்டு பார்வையாளர்களுக்கு பரவசம் ஊட்டுகிறார், ‘திறமை’யான கவர்னர்’ அதிகாரி அலெக்சாண்டர் என்று!

தமிழகத்தின் அரசாட்சியை மீண்டும் பிடிக்க, இழந்த சொர்க்கத்தை மீட்க ஏற்கனவே ‘‘வரியில்லா’’ பட்ஜெட்டை தமிழக மக்களுக்கு பரிசாகக் கொடுத்த ராஜீவ் அரசு இப்போது கவர்னர் ஆட்சியின் மூலம் மேலும் சில பரிசுகளை தமிழக மக்களுக்கென ஒதுக்கியிருக்கி



படிப்பகம்

www.padippakam.com

# பராக்...! பராக்....!!

றது. வழக்கமாக ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் என தமிழகத்திற்கு கொடுத்து வந்த அரிசி ஒதுக்கீட்டை 80,000 டன்னாகவும் நெய்வேலி, கல்பாக்கம் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கூடுதல் மின்சாரத்தையும் 'தாராளமாக' வழங்கியுள்ளது.


ராஜீவ் அரசின் தேவதூதராக தமிழகத்தில் இறங்கியிருக்கும் கவர்னர் அலெக்சாண்டரோ, மத்திய அரசின் 'தாராள' உதவியுடன் தன் 'மகாத்மியங்'களை இணைத்து தமிழகத்தையே தலைகீழாக மாற்றிவிடப் போவதாக பத்திரிகை செய்திகள் மூலமாகவே தொடர் பிரச்சாரம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்.

வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றைப் போக்க மாற்று 5 அம்ச பொருளாதாரத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, விரைவாக செயல்படுத்தப் போவதாக ஆரவாரமாக அறிக்கை விடுகிறார்.

தபால் கார்டு விலையை குறைப்பேன் என வாக்குறுதி கொடுத்த எம்.ஜி ஆரைப் பார்த்து கிண்டல் செய்த ஓட்டு சீட்டு அரசியல் விற்பன்னர்கள், காங்கிரசுக் கட்சிக்கு சில மாதகாலம் எடுபிடி வேலை செய்ய வந்த கவர்னர் அலெக்சாண்டர் தம் அதிகார வரம்பு மீறி சவடால் அடிப்பதை எல்லாம் பயபக்தியோடு கேட்டு, அவர் திறமையை போற்றி புகழ்கிறார்கள்.

மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கக்கூடிய மாநில அரசாங்கத்தினால்தான் மக்கள் நலனை பிரதிபலிக்க முடியும். மத்திய அரசாங்கத்தோடு முரண்பட்டு நிற்கின்ற, அதற்கு எதிரான தேசீய, பிராந்திய கட்சிகளின் ஆட்சிகளால், மாநிலத்திற்கோ அதன் மக்களுக்கோ ஒரு பயனும் இல்லை.

மலர்கீரிடம், பிறந்தநாள் கேக் கொடுத்து கவர்னரை குளிப்பாட்டும் சென்னை வாழ் குடிமக்கள் சங்கம்.



மாறாக, தொழில் முடக்கமும் ஊழலும் பொறுப்பற்ற நிர்வாகமும்தான் மிஞ்சும். எனவே, வரும் தேர்தலிலாவது காங்கிரசை தேர்ந்தெடுப்பதுதான் புத்திசாலித்தனம் என காங்கிரசுக்காக இறுதிகட்ட தேர்தல் பிரச்சாரத்தை நடத்திக் கொண்டிருக்கிறார் கவர்னர் அலெக்சாண்டர். கூடவே, நாடாளுமன்ற ஜனநாயகத்தினால் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளைவிட, அதிகாரவர்க்க கும்பலும் அதன் நேரடி உத்திரவின் கீழ் இயக்கப்படும் அரசு எந்திரமும்தான் மக்களின் பிரச்சினையை தீர்க்கவல்லது. தேவையில்லாமல் இந்த அதிகாரவர்க்க, அரசு எந்திரத்துக்குள் திணிக்கப்படும் நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது கட்டுச்சோற்றுக்குள் எலியை வைத்துக் கட்டிய கதையாகத் தான் முடியும் என நாசூக்காக பாசிச காட்டாட்சிக்கு மக்களிடம் உரிமம் வாங்கும் விஷப் பிரச்சாரத்தையும் நடத்திக் கொண்டிருக்கிறார்.

சென்னை வாழ் குடிமக்கள் சங்கம், இன்னும் பல பெயர் பலகையின் கீழ் ஒன்று திரண்டு இருக்கும் அதிகாரத்தரகர்கள், வர்த்தகச் சூதாடிகள், தொழிலதிபர்கள், கறுப்பு பண முதலைகள், ரகசிய உலக பேர்வழிகள், ரோட்டரிகிளப் 'லயன்ஸ் கிளப்', அறக்கட்டளை என்ற போர்வையில் ஒளிந்து கொண்டிருக்கும் மேற்கத்திய நாடுகளின் விசுவாசிகள், பண்ணைப் பிரபுக்கள், 'நடுநிலை' பத்திரிக்கைகளின் முதலாளிகள் அடங்கிய கும்பல்தான் இப்போது திறமையான அதிகாரி அலெக்சாண்டரை சுற்றியிருக்கும் மேட்டுக்குடி கனவான்கள். இவர்கள்தான் கவர்னர் ஆட்சியின் 'மகாத்மியங்'களை பிரச்சாரம் செய்யும் பாசிச ராஜீவ் கும்பலின் சகபாடிகள்.

உண்மைதான்! இவர்களின் கொள்ளைச் சுரண்டலுக்கு காங்கிரசின் எதிரணியில் இருக்கும் ஓட்டு பொறுக்கிகள் ஆட்சியில் அமர்வது ஒரு குறுக்கீடுதான். தேவையில்லாமல் இரண்டு கும்பலுக்கும் கையூட்டு கொடுப்பது அறிவற்ற செய்கைதான். ஆனால் உழைக்கும் மக்களுக்கோ காங்கிரசு கட்சி உட்பட எந்த ஓட்டுப் பொறுக்கிகள் ஆட்சியில் அமர்ந்தாலும், கவர்னர் ஆட்சியே நீடித்தாலும் ஒரு விடிவும் பிறக்கப் போவதில்லை. நடைமுறை அனுபவம் மெய்ப்பிப்பதும் இதைத்தான். தேர்தல் பாதை, திருடர் பாதை, மக்கள் பாதை, புரட்சி பாதை. எனவே, தேர்தலை புறக்கணிப்போம்; மாறுதலுக்கு புரட்சி பாதையில் அணிதிரள்வோம்.

● பச்சையப்பன்

படிப்பகம்

www.padippakam.com

# குடியிருப்புப் பகுதியில் ஆயுதக்கிடங்கு - விபத்து!



ஜபல்பூர் நகர் குண்டு வெடித்த குடியிருப்புப் பகுதி

போபால் விஷவாயுப் படுகொலை நடந்த மத்தியப்பிரதேசத்தின் ஜபல்பூர் நகரம். மார்ச் 23ம் நாள், அந்திசாயும் நேரம். திடீரென காதைப் பிளக்கும் வெடி சத்தம், கண்ணைப் பறிக்கும் ஒளிவெள்ளம். 500 மீட்டர் உயரத்திற்குப் பற்றி எரியும் நெருப்பு. சுற்றிலும் புகை மூட்டம். ஜபல்பூர் நகரமே அதிர்ந்து குலுங்கியது.

நகரின் மையத்தில் குடியிருப்பு பகுதிகளை ஒட்டி ராணுவத் தளவாடங்களைக் குவித்து வைத்துள்ள மத்திய ஆயுதத் தளவாடக் கிடங்குதான் வெடித்து சிதறியது. ஏவுகணைகள், டாங்கிக் குண்டுகள், சக்திமிக்க தரைப்படைக்கான குண்டுகள் அத்தனையும் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறினால் எப்படி இருக்கும்? அதிலும் ஆசியாவிலேயே மிகப் பெரிய இக்கிடங்கிலிருந்து குறைந்தபட்சம் 1000 டன் எடையுள்ள குண்டுகளும் ஏவுகணைகளும் வெடித்துச் சிதறினால் எப்படி இருக்கும்?

குடியிருப்பு பகுதிகளில் ஏற்பட்ட அதிர்வினால் சன்னல்கள் விழுந்து நொறுங்கின. 4 கி.மீ. சுற்றளவுக்கு புகைமூட்டம் சூழ்ந்தது. 23ம் தேதி மாலை தொடங்கிய இந்த குண்டு வெடிப்பு தொடர்ந்து மூன்று நாட்கள் நீடித்தது. விண்முட்டுமளவு பற்றி எரியும் பெரு நெருப்பு; போர்களத்தில் நிற்பதுபோன்ற இடைவிடாத குண்டுவெடிப்பு. வெடித்துச் சிதறி பறந்து விழுந்து மேலே விழும் நெருப்புக் கங்குகள். மூச்சு முட்டும் கந்தக நெடி. பீதியுற்ற ஜபல்பூர் மக்களும் சுற்றுப்புற கிராம மக்களும் அலறி அடித்துக் கொண்டு கையில் கிடைத்த உடமைகளை வாரிக்கொண்டு தப்பியோடினார்கள்.

ஜபல்பூர் குண்டு வெடிப்பையடுத்து உயிர்தப்ப ஊரை விட்டே ஓடும் சுற்றுப்புற பகுதிவாழ் மக்கள்.



முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாததால், வெப்பமும் அழுத்தமும் அதிகரித்து வெடிவிபத்து ஏற்பட்டதாக ராணுவ அதிகாரிகள் அறுதியிடுகின்றனர். ஆனால் விபத்து ஏற்பட்ட உடனேயே சுற்றுப்புற பகுதிவாழ் மக்களை உடனடியாக பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்த எந்த முயற்சியையும் ராணுவ கும்பல் எடுக்கவில்லை. மாவட்ட கலெக்டர் உள்ளிட்ட சிவிலியன் அதிகாரிகள் ராணுவ அதிகாரிகளிடம் விபத்தின் தன்மையையும் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பற்றி கேட்டபோதும்கூட எதுவும் கூற மறுத்துவிட்டனர். மார்ச் 24 அன்று மாநில முதல்வரும் முன்னாள் மத்திய காபினெட் மந்திரியுமான அர்ஜுன்சிங் ராணுவ அதிகாரிகளிடம் நிலைமையை விசாரித்த போதும்கூட இது ராணுவ விவகாரம் எதையும் கூற முடியாது என்று மறுத்தனர்.

பல கோடி ரூபாய் மதிப்புள்ள ராணுவத் தளவாடங்களை சாம்பலாக்கி பகுதிவாழ் மக்களையும் தாக்கிய இந்த கோர விபத்தில் மாண்டவர் யாருமே இல்லை. பத்து பேர் மட்டுமே படுகாயமுற்றுள்ளனர் என்று நம்பச் சொல்கிறது அரசு. குடியிருப்புப் பகுதியில் ராணுவத் தளவாடங்களைக் குவிப்பது குற்றமல்ல; ஆனால் ஆயுதக் கிடங்கைச் சுற்றி மக்கள் குடியேறியது தான் தவறு என்று வாதிடுகிறது அரசும் ராணுவக் கும்பலும். அதன்படி இப்போதைய விபத்தை சாக்காகக் காட்டி கூலி ஏழை மக்களை குடியிருப்புப் பகுதிகளிலிருந்து விரட்டுகிறது.

மக்களை மரண பயத்தில் தள்ளிவிட்டு விதிமுறைகளை மீறி குடியிருப்பு பகுதியில் ஆயுதங்களை குவித்து வைத்திருப்பது ஜபல்பூரில் மட்டுமா? இல்லை. இன்னும் ஏராளமான ராணுவக் கிடங்குகள் குடியிருப்புப் பகுதிகளிலேயே நிறுவப்பட்டுள்ளன.

சென்னையில் கோட்டை ரயில்நிலையம் அருகேயும், பல்லாவரத்தில் ஆலை- குடியிருப்பு பகுதிக்கு அருகேயும் ஆயுத தளவாட கிடங்குகளை அரசு நிறுவியுள்ளது. ஜபல்பூரைப் போலவே, குடியிருப்பு பகுதியில் விஷவாயு ஆலையை சட்ட விரோதமாக நிறுவி போபாலில் ஈராயிரம் மக்களைக் காவு கொண்டது பிற்போக்கு அரசு. இன்று போர்வெறி பிடித்து ஒரிசாவின் பாலியபால் பகுதியில்- மீனவர்களும் விவசாயிகளும் நிறைந்த கடற்கரைப் பகுதி-அணு ஆயுத ஏவுகணைத் தளம் நிறுவ வெறிகொண்டலைகிறது. இதோடு அணுசக்தி நிலையங்களை குடியிருப்பு பகுதிகளுக்கு அருகே நிறுவி மக்களின் உயிரோடு விளையாடுகிறது. இவையெல்லாம் நாட்டின் பாதுகாப்புக்கானது என்று நைச்சியமாகப் பேசி மக்களை ஏய்க்கிறது. எதிர்த்துபோராடுவோரைமிருகத்தனமாக ஒடுக்குகிறது. சுற்றுச் சூழலைப் பற்றியோ, மக்கள் நலனைப் பற்றியோ கிஞ்சித்தும் அக்கறையற்ற இம் மக்கள் விரோத அரசை இன்னும் நீடிக்க விடுவது முறைதானா?

— மணி

★ ஜபல்பூர் சம்பவத்தையடுத்து மார்ச் 10ம் நாளன்று பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தின் குடியிருப்புப் பகுதியின் நீடுவேயுள்ள ஆயுதக்கிடங்கு வெடித்து சிதறி தரைமட்டமாகியது. 1000க்கு மேற்பட்டோர் மாண்டு போயினர்; 10,000க்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றனர். உறவினர்களையும் உடமைகளையும் இழந்து தவிக்கும்

படிப்பகம்

www.padippakam.com



வியன்னா நகரில் ஆயுத பேரத் தரகர்களின் ரகசிய சதியாலோசனை. (இடமி ருந்து வலமாக) மாமாஜி, போபர்ர்ஸின் முன்னாள் தலைவர் அர்ட்போ, சந்திரா சாமி, அவர் எதிரே கஷோகி மற்றும் நைஜீரிய பெட்ரோலிய மந்திரி லுக்மான்.

## போபார்ஸ்:

# இறுதிக் காட்சி நெருங்குகிறது!

ஒரு பொய்யை திரும்பத் திரும் பச் சொல்வதன் மூலம் அதை உண்மை யென நிலைநாட்டுவது பாசிஸ்டுகளின் பண்பு. இடைத்தரகர்களே இல்லை; ஊழல் எதுவும் நடக்கவில்லை என்று நம்பச் சொன்னார் பாசிசப் பிரதமர் ராஜீவ். பின்னர் ஒப்பந்தம் கையெழுத் தாகும் போது இடைத்தரகர்களே இல்லை என்றார். பிறகு நானோ என் குடும்பமோ சம்பந்தப்படவில்லை என்று வரிசையாகப் புளுகினார். இதை நிலைநாட்டுவதற்காக ஆயுத பேரத் தரகர்களிடமும், ரகசிய உலகப் பேர்வ ழிகளிடமும் சான்றிதழ் பெற்று நம்பச் சொல்கிறார். ஆனால் பாசிச ராஜீவ் கும் பல் தன்னை பரிசுத்தமாக காட்ட எடுக் கும் ஒவ்வொரு கீழ்த்தரமான நடவ டிக்கையும் அதன் அயோக்கியத் தனங்களை அங்குலம் அங்குலமாக அம்பலப்படுத்திக் காட்டுகிறது.

### சந்திராசாமியை மிரட்டிப் பணிய வைத்த காட்சி!

போபார்ஸ் ஆயுத பேரத்தில் யார் யாருக்கு தரகுத் தொகை அளிக்கப்பட் டது என்ற ரகசியத்தை அறிந்துள்ள முக் கிய புள்ளிகளில் ஒருவர் சந்திராசாமி. சந்திராசாமி மட்டுமல்ல அவரது தொழில் கூட்டாளிகளான மாமாஜி எனப்படும் அகர்வாலுக்கும், ரகசிய உலகப் பேர்வழியும் ஆயுத பேரத் தரக ருமான அட்னன்கஷோகிக்கும் இந்த ரகசியங்கள் தெரியும். சந் திராசாமி கும்பலுக்கு இந்த ரகசியங்கள் எப்படித் தெரிந்தது?

போபார்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மார்டின் அர்ட்போ. இவர் பொறுப்பிலிருந்த போதுதான் போபார்ஸ் பீரங்கி பேரம் நடந்தது. 1300 கோடி ரூபாய்க்கு பீரங்கி வியாபா ரத்தை முடிக்க 1985-86ல் அர்ட்போ பல மாதங்கள் டெல்லியில் தங்கி பேரம் பேசியுள்ளார். இதற்காக மத்திய மந்தி ரிகள் பாட்நகர், அருண்சிங் மற்றும் பல உயரதிகாரிகளை சந்தித்ததோடு ராஜீ வையும் சந்தித்துப் பேசி மிகப்பெரிய வியாபாரத்தை திறமையாக முடித்துள் ளார். ஆனால் ஒப்பந்தம் முடிந்ததும் அவர் போபார்சிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டதால், தான் அவமானப்ப டுத்தப் பட்டதாக பொருமினார்.

இந்த நேரத்தில் இந்தியாவின் இன்னு மொரு ஆயுத வியாபாரத்தில் இடைத்த ரகராக அட்னன் கஷோகியை நிய மிக்கக் கோரி ராஜீவிடம் பேரம் பேசிய சந்திராசாமி, அது கிடைக்காமல் போகவே ராஜீவ் மீது எரிச்சலடைந் தார். அதே நேரத்தில் போபார்ஸ் ஆயுத பேர ஊழலில் ராஜீவ் கும்பல் சிக்கிக் கொண்டதும், ஊழல் ரகசியங்களை அம்பலப்படுத்தி ராஜீவைப் பழி வாங்கத் தீர்மானித்தார். இதன்படி, அதி ருப்தியுற்றிருந்த போபார்ஸ் முன்னாள் தலைவர் அர்ட்போவைச் சந்தித்து ரகசி யங்களைக் கறக்க முடிவானது.

திட்டமிட்டபடி சந்திராசாமி, மாமாஜி, கஷோகி, அவரின் செயலா ளர் உள்ளிட்ட இக்கும்பல் வியன்னா நகரில் செப்.10, 1987 அன்று அர்ட்போ வைச் சந்தித்தது. அர்ட்போ தான் கொடுக்கும் ரகசியத் தகவல்களுக்கு ஈடாக, பொருத்தமான பரிசை எதிர் பார்த்தார். பின்னர் மீண்டும் செப்.16 அன்று பாரீசில் இத்தரகர்கள் கூடிப் பேசினர். புருனே சுல்தானிடம் தனக்கி ருந்த நெருக்கத்தைக் காட்டி, புருனே நாட்டிற்கு ஆயுதத் தளவாட ஆலோ சகராக அர்ட்போவை நியமிக்க ஏற் பாடு செய்வதாக சந்திராசாமி வாக்க ளித்தார். இதோடு தெற்காசியாவில் ஒரு நாட்டின் ஆயுதக் கொள்முதலில் அர்ட்போ இடைத் தரகராக செயல்பட மற்றவர்கள் விட்டுக் கொடுப்பதென வும் முடிவானது. கொழுத்த பம்பர் பரிசு தனக்குக் கிடைத்த மகிழ்ச்சியில் அர்ட்போ போபார்ஸ் ரகசியங்களை அவிழ்த்து விட்டார். இவறறை சந்திரா சாமி கும்பல் ஒலிப்பதிவு செய்துள் ளதாக நம்பப்படுகிறது.

சந்திராசாமி- அர்ட்போ சந்திப்பைப் பற்றி அறிந்த ஸ்வீடன் அரசு அர்ட்போ மீது வழக்கு தொடுத்து, அரசு தரப்பு வழக்கறிஞர் அவரது நாட்குறிப்பேட் டைக் கைப்பற்றினார். போபார்ஸ் பீரங்கி பேரத்தில் இடைத்தரகர்களாகச் செயல்பட்ட மூன்று கம்பெனிகளுக்கு பின்னால் மறைந்து தரகுத் தொகையைப் பெற்ற மூன்று முக்கிய புள்ளிகளின் பெயர்களை ஹெச் (H), க்யூ (Q), ஜி (G) என்று சுருக்கமாக அர்ட்போ அதில் எழுதி வைத்துள்ளார். இடைத்தரகர்களாகச் செயல்பட்ட மூன்று அன்னியக் கம்பெனிகள்- ஸ்வென்ஸ்கா, மொரேஸ்கோ, ஏ.ஈ. சர் வீசஸ் ஆகியன- ஏற்கனவே அம்பல மாகிவிட்ட நிலையில், அதன் பின்னா லிருந்து தரகுத் தொகை பெற்ற ஹெச், க்யூ, ஜி என்பவர்கள் யார்?

இதில் ஹெச் என்ற நபர் லண்டனைச் சேர்ந்தவர் என்றும், அவர் அர்ட்போ வின் கூட்டாளியும் ஆலோசகருமாக இருப்பவர் என்றும் வெளியாகியுள் ளது. இதில் க்யூ என்பவர் யாரென்று

படிப்பகம்

www.padippakam.com

தெரியவில்லை. ஆனால் ஜி என்பவர் யாரென்று இந்திய மற்றும் ஸ்வீடன் அதிகாரிகளுக்குத் தெரியுமாம்! ஜியை காப்பாற்ற ஹெச்-ஐ சரிகட்ட வேண்டியுள்ளதாம்! (ஜி என்றால் காந்தியா?)

இதற்கிடையே போபார்ஸ் ரகசியங்களைப் பற்றி அறிந்த சந்திராசாமி, எங்கே உண்மைகளை உளறிக் கொட்டி விடுவாரோ என்று மிரண்ட ராஜீவ் கும்பல் அவரைப் பணியவைக்கத் தருணத்தை எதிர்ப்பார்த்துக் காத்திருந்தது. அதுவரை வெளிநாடுகளில் சுற்றிக் கொண்டிருந்த சந்திராசாமி இந்தியா வந்திறங்கியதும் அவரை அன்னிய செலாவணி கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் ராஜீவ் கும்பல் கைது செய்தது.

கைதும், சோதனைகளும் நடந்ததும் சாமியாரும் அவரது தொழில் கூட்டாளி மாமாஜியும் தட்டைத் திருப்பிக் கொண்டு ராஜீவ் கும்பலுக்கு ஆதரவாக தாளம் போட ஆரம்பித்து விட்டனர். ராஜீவுக்கு நற்சான்றிதழையும் விசுவாசத்தையும் காட்டுகின்றனர். எப்படியோ ஒருவழியாக போபார்ஸ் ரகசியங்களை அறிந்த சந்திராசாமியை வாயடைப்பதில் ராஜீவ் கும்பல் வெற்றி பெற்று விட்டது.

சந்திராசாமி கும்பலை வாயடைத்து விட்ட தைரியத்தில், ராஜீவ் கும்பலின் விசுவாச ஆயுத பேரத் தரகரும், போபார்ஸ் ஊழல் ரகசியங்களை அறிந்த இன்னொரு முக்கிய புள்ளியான வின்சாடாவிடம் நற்சான்றிதழ் பெறுவதற்கான ஏற்பாடுகளை ராஜீவ் கும்பல் முடுக்கி விட்டது.

**விசுவாசத் தரகர் வின்சாடாவை சரிகட்டிய காட்சி!**

வின்சாடா போபார்ஸ் நிறுவனத்தின் 11 ஆண்டுகால இந்திய ஏஜெண்ட் அனட்ரோனிக்ஸ் இன்டர் நேஷனல் என்பது அவரது தரகுத் தொழில் நிறுவனம். சுவீடனின் போபார்ஸ் பீரங்கி பேர ஒப்பந்தம் கையெழுத்தானதும் டெல்லியிலுள்ள ஐந்து நட்சத்திர ஓட்டலில் அதிகாரிகள், ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள், ராணுவ அதிகாரிகளுக்கு விருந்து கொடுத்து மகிழ்ச்சியுடன் கொண்டாடினார். பின்னர் போபார்ஸ் ஊழல் பூதம் வெளிக்கிளம்பியதும் வின்சாடாவைப் பத்திரமாக தப்பியோடுவதற்கு வசதி செய்து கொடுத்தது ராஜீவ் கும்பல். மே இரண்டாவது வாரத்தில் வின்சாடா குடும்பத்தோடு அமெரிக்காவுக்கு தப்பியோட அனுமதித்து விட்டு, பிறகு வின்சாடா அலுவலகத்தையும் வீட்டையும் சோதனையிட்டு தன்னை திருவாளர் பரிசுத்தமாகக் காட்டி ஏய்த்தார் ராஜீவ்.

வின்சாடா குடும்பத்துடன் அமெரிக்காவுக்கு தபபியோடிய போது தனது பாஸ்போர்ட் தொலைந்து விட்டது என்று 'டூப்ளிகேட்' பாஸ் போர்டுடன் தான் சென்றார். இதற்கும் இந்தியத் தூதரகம் அவசரமாக ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது. பின்னர் அமெரிக்காவிலிருந்து வின்சாடா பஹாமாஸ் நாட்டிற்கு சென்று திரும்பியதும் அந்த பாஸ்போர்ட் இரண்டு மாத காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும் நிலையில் இருந்தது. இரண்டு மாதமே செல்லுபடியாகும் பாஸ்போர்ட்டை வைத்துக் கொண்டு வின்சாடா ஆண்டுக் கணக்கில் அமெரிக்காவில் எப்படி தங்க முடிந்தது என்பது ராஜீவ் கும்பலுக்கும் அதன் அமெரிக்க எஜமானர்களுக்குமே வெளிச்சம். ஆனால் வின்சாடா அமெரிக்காவில் ஐந்தாண்டு காலம் தங்குவதற்கான பச்சை அட்டை வைத்திருப்பவர்; அவர் சட்ட விரோதமாக அமெரிக்காவில் தங்கவில்லை என்று அமெரிக்கா இப்போது விளக்கம் கொடுக்கிறது.

வின்சாடா வில்லங்கமற்ற பாஸ்போர்ட் வைத்திருந்தாரா, இல்லையா என்பது ஒரு புறமிருக்க போபார்ஸ் ஊழலை விசாரிக்க நிறுவப்பட்ட பாராளுமன்ற கூட்டுக் கமிட்டி வின்சாடாவின் சாட்சியத்தை வலியுறுத்திய போது, 'அவருக்கு உடல் நிலை சரியில்லை; எனவே இந்தியாவுக்கு வர இயலாது' என்று அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதரகமே சான்றிதழ் கொடுத்துள்ளது. பின்னர் ஆறு நாடுகளின் கூட்டமைப்பு மாநாட்டில் கலந்து கொள்ள சுவீடன் சென்ற ராஜீவ். போபர்ஸ் ஊழல் வெளிவராதிருக்க

## சங்கரானந்தின் தகிடுதத்தம்!

போபார்ஸ் பீரங்கி பேர ஊழலில் வகையாக அகப்பட்டுக் கொண்ட பாசிச ராஜீவ் கும்பல், அதிலிருந்து தப்பிக்க, ஓர் அயோக்கியனின் அகராதியில் இருக்கும் அத்தனை அற்பத்தனங்களையும் செய்து வருகிறது.

மிகச் சமீபமாக இதோ இரண்டு:

* ஏப்ரல் 6ம் தேதி: போபார்ஸ் பீரங்கி பேரம் பற்றி விசாரிக்கும் நாடாளுமன்ற கமிட்டிக் கூட்டம். போபார்ஸ் நிறுவனத் தலைவர் மார்பெக்கும் கேத்தவினும் விசாரணைக்காக மீண்டும் கமிட்டி முன் ஆஜராகத் தயாராக இருக்கிறார்கள்; ஆனால் ஈஸ்டர் விடுமுறையாதலால் உடனடியாக வர முடியவில்லை என அவர்கள் தகவல் தந்திருப்பதாக கமிட்டி தலைவர் சங்கரானந்த் உறுப்பினர்களுக்கு அறிவிக்கிறார். அவர்கள் ஏற்கனவே வந்து கொண்டிருப்பதாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றனவே என உறுப்பினர்கள் கேட்கிறார்கள்: 'எனக்கு இது பற்றி அதிகாரப்பூர்வ தகவல் இல்லை' என்று திட்டவட்டமாக சங்கரானந்த் மறுத்து விடுகிறார்.



*விசாரணையா? கொண்டாட்டமா? போபாஸ் நிறுவனத் தலைவர் சகிருடன் நாடாளுமன்றக் கமிட்டி தலைவர் சங்கரானந்த்.*

ஏப்ரல் 7ந் தேதி காலை கமிட்டித் தலைவர் சங்கரானந்த் உறுப்பினர்களுக்கு அனுப்பிய செய்தியில், அன்று மதியம் கமிட்டி கூட்டம் நடக்கும் என்றும் அட்டர்னி ஜெனரல் பராசரன் சட்ட விளக்கம் அளிக்கும் நிகழ்ச்சி நிரல் மட்டும் எடுத்துக் கொள்ளப்படும் என்றும்



படிப்பகம்

www.padippakam.com

சுவீடன் பிரதமரிடம் சரிகட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். ராஜீவ் நாடு திரும்பிய சமயம் சுவீடனின் அரசு தரப்பு வழக்கறிஞர் விசாரணையை மூட்டை கட்டி விட்டதாக அறிவித்தார். சுவீடன் விசாரணையை அமுக்கி விட்ட மகிழ்ச்சியில் வின்சாடாவை செட்அப் செய்ய ராஜீவ் கும்பல் ஓடியது. வருவாய் அமல் பிரிவுத்துறை செயலாளர் அனில்குமார் உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் படுத்து கிடக்கும் வின்சாடாவை இவ்வாண்டு ஜனவரியில் ரகசியமாகச் சந்தித்தார். வின்சாடா மூலம் லண்டனிலுள்ள முக்கிய புள்ளி ஹெச்-ஐ சரிகட்டவும் ஏற்பாடாகிறது.

இந்த ரகசிய சதிகள் எந்த அளவு நிறைவேறியுள்ளது, வின்சாடா எப்போது இந்தியா திரும்பலாம் என்ற தகவலை ராஜீவ் கும்பலுக்குத் தெரிவிக்கவும், இப்போதைய நிலைமையை வெள்ளோட்டம் பார்க்கவும் வின்சாடா தனது மகன் ஹர்ஷ்சாடாவை திட்டமிட்டபடி இந்தியாவுக்கு அனுப்பினார்.

பித்தலாட்ட நாடகத்தின் அடுத்த காட்சி அரங்கேறியது. ஹர்ஷ்சாடா இந்தியா வந்திறங்கியதும் விமான நிலையத்திலேயே கைது செய்யப்பட்டார். பின்னர் யாருக்கும் தெரியாமல் ரகசியமாக விசாரிக்கப்பட்டார். மூன்று நாட்களில் அவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.



**ராஜீவின் விசுவாச ஆயுத பேரத் தரகன் வின்சாடா**

வின்சாடாவை அமெரிக்காவில் வருவாய் அமல் பிரிவு இயக்குனர் அனில் குமார் சந்தித்ததை இதுநாள் வரை ரகசியமாக வைத்திருந்த ராஜீவ் கும்பல், திடீரென இந்த விபரங்களை அவிழ்த்து விடுகிறது. போபார்ஸ் ஊழலில் ராஜீவோ அவர் குடும்பத்தினரோ சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்று அதற்காக வின்சாடா தன்னிடம் சத்தியம் செய்ததாக அனில்குமார் கூறுகிறார்.

**மோசடி நாடகத்தின் இறுதிக்காட்சி!**

இந்தியாவுக்கு வந்துள்ள ஹர்ஷ்சாடா மூலம், இடைத் தரகர்கள் சரிகட்டப்பட்டுள்ள தகவலை அறிந்த ராஜீவ் கும்பல் மோசடி நாடகத்தின் அடுத்த காட்சியை இப்போதே அறிவித்து விட்டது "வின்சாடா விரைவில் இந்தியா வந்து பாராளுமன்ற கூட்டுக் கமிட்டியிடம் சாட்சியம் கூறுவார்" என்று நம்பிக்கையோடு கூறுகிறது ராஜீவ் கும்பல்.

போபார்ஸ் ஊழல் ரகசியங்களை அறிந்த இன்னொரு முக்கிய புள்ளியான அர்ட்போ, இப்போது சுவீடன் நாட்டு விசாரணையில் "இடைத்தரகர்கள் யாருமில்லை; யாருக்கும் தரகுத் தொகை தரப்படவில்லை" என்று திடலடியாக மறுக்கிறார். தனது கூட்டாளிகள் மாட்டிக் கொண்டதால் மிரண்டு போனாரா அல்லது அவரும் சரிக்கட்டப்பட்டாரா? தெரியவில்லை. மேலும் போபார்ஸ் நிறுவனத் தலைவர் மார்பெர்க்கும், பிரதான அரசு வழக்கறிஞர் கேத்தலினும் மீண்டும் இந்தியா வந்து பாராளுமன்றக் கமிட்டியிடம் 'இந்தியர்கள் யாரும் ஊழலில் சம்பந்தப்படவில்லை' என்று சாட்சியளித்து விட்டனர். இனி நாடகத்தின் இறுதிக் காட்சியாக, போபார்ஸ் ஊழலில் இந்தியர்கள் - ராஜீவோ அவரது குடும்பத்தினரோ - யாரும் சம்பந்தப்படவில்லை என்பதை நிரூபித்து விட்டதாகக் கூறி பாராளுமன்ற கூட்டுக் கமிட்டியின் விசாரணையை மூட்டை கட்டி விட ராஜீவ் கும்பல் முடிவு செய்துள்ளது.

**மனோகரன்**

அறிவிக்கிறார். மதியம் அதன்படி கூட்டம் கூடியது; மார்பெக்கும் கேத்தலினும் கூட்டத்திற்கு விசாரணைக்கு வர உள்ளார்கள்; அந்த நிகழ்ச்சி நிரல் மட்டும்தான் இப்போது எடுத்துக் கொள்ளப்படும் என சங்கரானந்த் திடீரென அறிவிக்கிறார்.

உடனே அ.தி.மு.க. எம்.பி. ஆலடி அருணா எழுந்து, 'அவர்கள் எப்பொழுது வருவார்கள் எனத் தெரியாது என நேற்றுதான் சொன்னீர்கள்; இவ்வளவு சீக்கிரம் வருவதற்கு அவர்கள் என்ன ஆக்ராவிலிருந்தோ, அல்லது குவாலியரிலிருந்தோ வரவில்லை. ஸ்டாக்ஹோமிலிருந்து வந்து சேர இரண்டு நாளாகும்; கமிட்டி தலைவர் அவர்களே, இதை ஏன் வெளியுறவு அமைச்சகம் கமிட்டிக்கு தெரிவிக்கவில்லை' எனக் கேட்டிருக்கிறார். மேலும், ஏற்கனவே குறித்த நிகழ்ச்சி நிரல்தான் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என வாதிட்டுள்ளார். முடியாது, மார்பெக்கையும் கேத்தலினையும் விசாரிப்பதுதான் நடக்கும் என திடலடியாக சொல்லிவிட்டு விசாரணையை நடத்தியுள்ளார் சங்கரானந்த்.

எதற்காக இந்த பொய்? தில்லு முல்லு? மார்பெக்கையும் கேத்தலினையும் விசாரிக்கும் சரியான தேதியையும் நேரத்தையும் முன்கூட்டியே சொல்லிவிட்டால் உறுப்பினர்கள் குறுக்கு விசாரணைக்கு தயாரிப்புடன் வந்துவிடுவர். அப்புறம் உண்மை எக்குதப்பாக வெளிவந்துவிடும்; அதைத் தடுக்கவே இந்த தகிடுதத்தம்!

✱ மார்ட்டின் ஆர்ட்போ போபார்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர்; இவருடைய காலத்தில்தான் பேரம் முடிக்கப்பட்டது; எனவே, யார் யாருக்கு எவ்வளவு தரப்பட்டது, எந்த பினாமி கம்பெனி பெயரில் கொடுக்கப்பட்டது என்பதையெல்லாம் விபரமாக அறிந்த முக்கிய புள்ளி, ஆர்ட்போவையும் அழைத்து வருமாறு மார்பெக்கிற்குதான் வேண்டுகோள் அனுப்பியதாகவும், ஆனால் ஆர்ட்போவின் தற்போதைய முகவரியோ, டெலிபோன் நம்பரோ தனது கம்பனிக்குத் தெரியாததால் ஆர்ட்போவுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று போபார்ஸ் கம்பெனி தகவல் தெரிவித்துள்ளது என்றும் ஏப்ரல் 6-ம் தேதியே சங்கரானந்த் உறுப்பினர்களிடம் தெரிவித்திருந்தார்.

ஏப்ரல் 7-ம் தேதி, மார்பெக்கிடமும் கேத்தலினிடமும் விசாரணை நடத்தியபோது, அ.தி.மு.க. எம்.பி. ஜகத்ரட்சகன், மார்பெக்கிடம், 'ஆர்ட்போவின் முகவரியைக்கூட வைத்துக் கொள்ளாத அளவிற்கு என்ன கம்பெனி நடத்துகிறீர்கள்?' எனக் கூறியுள்ளார். 'இல்லையே, எங்களிடம் ஆர்ட்போ பற்றி யாரும் விசாரிக்கவில்லையே' என குட்டை உடைத்திருக்கிறார். சங்கரானந்தின் முகத்தில் ஈயாடவில்லை. 'இது நமக்குள் பேச வேண்டியது' என ஜகத்ரட்சகனிடம் நைச்சியமாக கூறியுள்ளார்.

சிம்மாசன திருடரின் தில்லுமுல்லுகள் எத்தனை நாளைக்கு? உண்மை வெளிவரும்; அப்போது, இந்தக் கயவர்கள் தண்டிக்கப்பட்டே தீருவார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# சமூக விரோதிகளின் கூடாரமாக 'தேசிய' கட்சிகள்

சமூக விரோதத் தொழிலைச் செய்து பிரபலமாகிவிட்ட கேடிகளும், கிரிமினல் பேர்வழிகளும் ஓட்டுக் கட்சித் தலைவர்களாவதும், அரசியல் செல்வாக்கின் காரணமாக சமூக விரோத தொழிலை தைரியமாகச் செய்வதும் நாறிவரும் எல்லா தேசியக் கட்சிகளுக்கும் உரித்தான பொதுப் பண்பு என்பதை சமீபத்திய இரு சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

* * *

கன்வல்ஜித்சிங். டெல்லியைச் சேர்ந்த பணக்கார விபச்சாரத் தரகர், ஒரு இரவுக்கு ரூ.2000 முதல் ரூ.15,000 வரை வாடிக்கையாளர்களிடம் கட்டணம் வாங்கும் விபச்சாரிகளை வைத்துக் கொண்டு தொழில் செய்பவர். இதன் மூலம் மாதத்திற்கு ரூ.2 லட்சம் வரை சம்பாதிக்கும் மேல்மட்ட விபச்சாரத் தரகர்.

ஆளும் கட்சியிலிருந்து எதிர்கட்சி வரை மந்திரிகள், எம்.பி.க்கள், தலைவர்கள், அதிலும் தேசிய எதிர்க்கட்சியான லோக்தள கட்சிக்காரர்களிடம் அவருக்கு செல்வாக்கு அதிகம். பகுகுணாவும் அரியானா முதல்வர் தேவிலாலும்கூட அவருக்கு நெருக்கம்.

கேவலம் மந்திரிகளின் ஆசைநாயகிகள்கூட எம்.பி.யாகும்போது, மேட்டுக்குடி விபசாரத்தரகனாகிய தனக்கு அந்த தகுதி இல்லாமலா போய் விட்டது என்று சபலப்பட்டார் கன்வல்ஜித்சிங். லோக்தள கட்சியின் சார்பாக அரியானாவிலிருந்து ராஜ்ய சபைக்கு தன்னை எம்.பி.யாக நியமிக்க வேண்டிக் கொண்டார். லோக்தளக் கட்சிப் பிரமுகர்களுக்கு குடியும், கூத்தும் ஏற்பாடு செய்யப்பட்டு களிவெறியாட்ட போதையில் மூழ்கினர். கன்வல்ஜித்சிங் வேட்பு மனுத் தாக்கல் செய்யவும் ஏற்பாடாகியது.

ஆனால் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான இறுதி நாளுக்கு முதல் நாளன்று டெல்லி போலீசார் இரு விபச்சாரிகளுடன் சேர்த்து ஐந்து நட்சத்திர ஓட்டலின் முன் கன்வல்ஜித்சிங்கைக் கைது செய்த டெல்லி போலீசார் அவரது கேவலமான தொழிலைப் பற்றி கதைகதையாக அவிழ்த்து விட்டார்கள்.

ஆனால் இந்த மேட்டுக்குடி விபச்சாரத் தரகனின் வாடிக்கையாளர்கள் பட்டியலில் காங்கிரசுப் பெருச்சாளிகளும் இருப்பதைப் பார்த்து அரண்டு போன போலீசார் இந்த விவகாரத்தை அப்படியே அமுக்கிவிட்டனர். கன்வல்ஜித்சிங் இப்போது ஜாமீனில் வெளியே வந்து விட்டான்.

மந்திரிப் பிரதானிகளும் மக்களவைப் பிரதிநிதிகளும் வாடிக்கையாளர்களாக இருப்பதால் அவர்களிடமிருந்து நைச்சியமாகவோ மிரட்டிப் பணிய வைத்தோ முக்கியமான அரசு ரகசியங்களைக் கறந்து வெளிநாடுகளுக்குக் கடத்திச் செல்லும் உளவாளியாக இவன் செயல்பட்டிருக்கலாம் என்று போலீசார் அஞ்சுகின்றனர். முன்னாள் வெளியுறவுச் செயலாளருடன் இவனுக்கிருந்த நெருக்கம், பாகிஸ்தான் விளையாட்டுக் குழுவினரை இவன் டெல்லியில் ரகசியமாக சந்தித்தது ஆகியவை இதனை உறுதிப்படுத்துவதாக நம்புகின்றனர். கேவலம் ஒரு புட்டி சீமைச் சாராயத்துக்காக நாட்டின் ரகசியங்களையே உயர்மட்ட அதிகாரிகள் விற்றனர் என்றால், பெண் சுகத்துக்காக மந்திரிகளும், எம்.பி.களும் ரகசியங்களைக் கக்காமலா போய் விடுவார்கள்? அந்த நம்பிக்கையில் ஓராயிரம் கன்வல்ஜித் சிங்குகள் நாட்டில் உலவிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

சேத் சம்பாலால் ஜெயின். ராஜஸ்தானின் அஜ்மீர் மாவட்டத்திலுள்ள பேவார் நகரைச் சேர்ந்த காங்கிரசு பெருந்தனக்காரர். கதராடை- காந்திக்குல்லாயுடன் எளிமையாகத் தோற்றமளிக்கும் அவருக்கு வெடிமருந்துகளை விற்பனை செய்வது பிரதான தொழில். காங்கிரசுக் கட்சிக்குத் தேர்தல் நிதியளிக்குமளவுக்கு மாநிலத்திலேயே 'இத் தொழிலில் ஏகபோகமாகத் திகழ்பவர். மாநில காங்கிரசுத் தலைவர்கள் மட்டுமல்ல, மத்திய உள்துறை மந்திரி பூட்டாசிங்கும், ஏன் ராஜீவ் காந்தியும்கூட அவருக்கு நெருங்கிய நண்பர்கள்.

நேர்மையாகத் தொழில் நடத்துபவராக இருந்தால் அவர் ஏன் காங்கிரசு கட்சியில் இருக்க வேண்டும்? காங்கிரசு கலாச்சாரப்படி குறுக்கு வழியில் குபேரராக வெடிமருந்து கடத்தல் தொழிலில் இறங்கிவிட்டார். வடகிழக்கிந்திய தீவிரவாத அமைப்புகளுக்கு வெடிமருந்துகளைக் கடத்தி விற்பதும், அதற்கீடாக கஞ்சாவை ராஜஸ்தானுக்கு கடத்தி வந்து விற்பதுமான சமூக விரோதத் தொழிலை நீண்ட காலமாக கதராடைப் போர்வையில் கௌரவமாக நடத்தி வந்தார்.

பேவார் நகரிலிருந்து இரண்டு பெரிய கறுப்புப் பெட்டிகளுடன் சென்ற மாட்டுவண்டியை சந்தேகத்தின் பேரில் போலீசார் சோதனையிட்டபோது அவற்றில் சக்திமிக்க வெடிமருந்தையும், இணைப்பு வயர்களையும் கண்டார்கள். உரிமம் இல்லாமல் அவற்றை எடுத்துச் சென்றதற்காக அதன் உரிமையாளர் கான் என்பவரைக் கைது செய்தனர். அதே நாளில்

ராஜீவுடன் காங்கிரசு கடத்தல் பெருச்சாளி சேத் சம்பாலால் ஜெயின்.





படிப்பகம்

www.padippakam.com

அஜ்மீர் ரயில் நிலையத்தில் கஞ்சா கடத்தி வந்த தஷ்ரத்சிங் என்பவர் போலீஸாரிடம் சிக்கினார். இருவரையும் போலீசார் விசாரித்த போது இருவரும் சம்பாலாலின் கடத்தல் தொழிலின் பினாமிகள் என்று தெரியவந்தது. இவர்கள் மட்டுமின்றி, மத்திய ரிசர்வ் படையில் பணியாற்றும் போலீஸார் மூவர் இக்கடத்தல் வேலையில் ஈடுபட்டிருந்தனர். விடுமுறையில் ஊருக்கு வரும்போது வடகிழக்கிந்தியாவிலிருந்து கஞ்சாவைக் கடத்தி வருவதும், திரும்பிச் செல்லும்போது வெடிமருந்தைக் கடத்திச் செல்வதுமாக யாரும் சந்தேகிக்காதபடி திறமையாக இத்தொழிலைச் செய்து வந்தனர். ஆனால் விசாரணையில் கடத்தல் புள்ளி சம்பாலால் மற்றும் அவரது சகோதரர் அமர்சந்த் பெயரை உளறிக் கொட்டிவிட்டனர். உடனே போலீஸார் சம்பாலால் குடும்பத்தின் பண்ணையைச் சோதனையிட்டு உரிமம் பெறாமல் வைத்திருந்த வெடிமருந்துகளையும், கடத்திவந்த கஞ்சாவையும் கைப்பற்றி, சம்பாலாலின் உறவினர்களைக் கைது செய்தனர். போலீஸ் வேட்டையின் போது தலைமறைவாகிவிட்ட சம்பாலாலும் அவரது சகோதரரும் இப்போது முன் ஜாமீன் பெற்றுக் கொண்டு தைரியமாக வலம் வருகின்றனர். தமது அரசியல் செல்வாக்கின் மூலம் தமது உறவினர்களை ஜாமீனில் விடுவித்து விட்டனர். சம்பாலாலின் கடத்தலை கையும் களவுமாகப் பிடித்து நிரூபித்துக் காட்டியும், நாகாலாந்திலிருந்து சம்பாலாலின் பினாமிக்கு அனுப்பிய வங்கிக் காசோலையைக் காட்டி மெய்ப்பித்தும்கூட இக் காங்கிரசு கடத்தல் பேர்வழியின் மீது நடவடிக்கை எடுக்க மறுக்கிறது மாநில அரசு. எதிர்க்கட்சிகள் எகிறிக் குதித்தாலும்கூட சட்டத்தையே தனது நெருங்கிய நண்பர் சம்பாலாலுக்காக வளைத்து முறுக்குகிறார் மாநில முதல்வர் மத்தூர்.



விபச்சார தரகன் கள்வல்ஜித் சிங்

★ ★ ★

தேசபக்தி, அகிம்சை, பிரிவினைவாதத்தையும் பயங்கரவாதத்தையும் எதிர்ப்பது முதலானவை தங்கள் கொள்கைகள் என்று 'தேசிய' கட்சிகள் மார்தட்டிக் கொள்கின்றன. ஆனால் விபச்சாரத் தரகர்கள் கள்ளச் சாராய கறுப்புப்பண பேர்வழிகள், கடத்தல் மாஃபியா குண்டர்களின் பைகளில் அல்லவா இந்த தேசிய கட்சிகள் பதுங்கிக் கொண்டிருக்கின்றன.

● குணசேகரன்

## சாதிவெறியர்களின் அக்கிரமம்!

ஒரு சாதிக்கு ஒன்பது சங்கங்கள் வைத்துக் கொண்டு தங்கள் இருப்பை நிலை நிறுத்திக் கொள்ளும் சாதிய சங்கத் தலைவர்கள் தங்கள் சாதியினருக்கு, அரசு சன்மானங்கள், சலுகைகள் இவற்றுக்காக 'தம்' மக்களை திரட்டுவதாக சொல்லிக் கொண்டு தங்கள் கும்பல் நலனை - சாதிய நலன்களை கூட அல்ல - சாதித்துக் கொள்கின்றனர்.

தொடர்சாலை மறியல் போராட்டம் நடத்தி அரசாங்க அங்கீகாரம் பெற்ற வன்னியர் சாதிய சங்கத்தலைவர்களின் அடியாட்களான சாதி வெறிப் பண்ணைப் பிரபுக்கள், மேலும் திணவெடுத்து, கூலி ஏழைகளை - சொந்த சாதியாக இருந்தாலும் - புழுவினும் கேடாக வதைக்கின்றனர். இதற்கு ஒரு உதாரணம்தான் இச் சம்பவம்.

சாதிய மோதல் தொடர்ச்சியாக நடக்கும் தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்திலிருந்து கீரப்பாளையம் வழியே விருத்தாசலம் செல்லும் வழி; வன்னியர் சாலை மறியல் போராட்டத்தின் போது இங்குதான் கலவரங்கள் உச்சக் கட்டத்தில் தலைவிரித்தாடின. கீரப்பாளையத்தில் இருந்து சில மைல் தொலைவில் சாக்காங்குடி என்ற கிராமம். இது பெரும்பான்மை வன்னிய மக்களையும், சிறுபான்மை அரிசன மக்களையும் கொண்ட ஊர் என்பதால் பாலதண்டாயுதம் என்னும் வன்னிய பணக்காரரே ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஏழை கூலிகளுக்கு சுய - தொழில் வழங்கும் திட்டத்திற்கு சேகர் என்ற அரிசன இளைஞரும் மனு செய்து கேட்டுக் கொண்டார். அக்கடன்கள் வழங்கப்பட்ட போது தனக்கு கிடைக்காததால், பால தண்டாயுதத்திடம் முறையிடச் சென்றார். ஆனால் அவர் வீட்டில் இல்லாது போக தன் கோபத்தை சொற்களால் வெளிப்படுத்திவிட்டு திரும்பி விட்டார், அந்த இளைஞர்.

செய்தி ஊராட்சி மன்றத் தலைவரான பால தண்டாயுதத்துக்கு எட்டியது. அடுத்து சில நாட்கள் சமயம் வருவதற்காக காத்திருந்தார். 18.3.88 வெள்ளியன்று பகல் பொழுது, பெரும்பகுதி அரிசன மக்கள் வேலைக்கு சென்றுவிட்ட நிலையில் ஒரு அரிசன சிறுவனை விட்டே சேகரை அழைத்து வரச் செய்தார்.

கடன் கொடுப்பதைப் பற்றி பேசத்தான் தன்னைக் கூப்பிடுகிறார் என்று சேகர், அப்பாவித்தனமாக பால தண்டாயுதம் வீட்டிற்குள் செல்ல, அங்கு தூணில் பிணைத்து வைக்கோல் பிரிகளால் கட்டப்பட்டார்.

நீருற்றி இறுக்கி, வாயில் நுரைத்தள்ளும் வரைஅடித்து துவைக்கப்பட்டார். அதோடு மட்டுமல்ல 'இந்த வாய் தானே என்னை ஏசியது' என பால தண்டாயுதம் கொலை வெறியோடு, சேகர் வாயில் 'பாலிடால்' விஷமருந்தை ஊற்றி அடித்து, குடிக்க வைத்து சேகரை வீட்டிலிருந்து அப்புறப்படுத்தியிருக்கிறார்.

சேகரின் சடலம் உடனே சிதம்பரம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, போலீசு கும்பல் துணையுடன் வழக்கு திசைத் திருப்பப்பட்டது. கடன் தொல்லை தாங்க முடியாமல், சேகர் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாக ஜோடித்து உறவினர்களை மிரட்டி கையெழுத்து வாங்கியது போலீசு.

ஏழை கூலிகளான சேகரின் உறவினரும், அவரது இளம் மனைவியும் (சில மாதங்களுக்கு முன்புதான் திருமணம் நடந்திருக்கிறது) என்ன செய்வதென்றே தெரியாமல் இடிந்து போய் அழுது கொண்டிருக்கிறார்கள். அன்றாடம் பிழைப்புக்கு பால தண்டாயுதம் போன்ற பண்ணைகளைச் சார்ந்திருக்கும் கிராம வாசிகளோ, உண்மை தெரிந்திருந்தும் வேறு வழி தெரியாமல் ஊமைகளாய் வாழ்கிறார்கள்.

**தகவல்: கதிரவன் புவனகிரி**

படிப்பகம்

www.padippakam.com



# விட்டெறிந்த காசுக்கு விலைபோன புலிகள்

ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழரின் தேசிய இனப் பிரச்சினையை ஒரு யுத்தகளமாக மாற்றி, ஒரு இரத்தக் களறியாக மாற்றி அதன் மூலம் இலங்கையில் தனது மேலாதிக்கத்தை நிறுவி, அதை தனது நவீன காலனியாக்க இந்தியா எண்ணிலடங்கா இழிவான நடவடிக்கைகளை செய்து வருகிறது.

இந்தியாவை காலனியாக்க பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பனி கையாண்ட பிரித்தாளும் சூழ்ச்சி, நம்பிக்கை துரோகம், இலஞ்சம் கொடுத்து கருங்காலிகளை உருவாக்குவது, மத்தியஸ்தன் போல நடித்து இரு பிரிவினரையும் கபளீகரம் செய்வது போன்ற எல்லா அயோக்கியத் தனங்களையும் கூட பாசிச ராஜீவ் கும்பல் மிஞ்சி விட்டது.

ராஜீவ் கும்பல் கையாண்ட இந்த சண்டாளத் தனங்களைப் பற்றியும் பல போராளி அமைப்புகள் எவ்வாறு விருப்பத்துடன் பாசிச ராஜீவின் எடுபிடிகளாக செயல்பட்டு வந்தனர்; வருகின்றனர் என்பதைப் புதிய ஜனநாயகத்தில் தொடர்ந்து விரிவாக அம்பலப்படுத்தி வந்திருக்கிறோம். இவற்றில் பலவற்றை விடுதலைப் புலிகள் ஒப்புக் கொண்டிருப்பதைப் பற்றியும் சென்ற இதழில் எழுதி இருந்தோம்.

இதோ, இப்போது; விடுதலைப் புலிகளின் தலைமையை இலஞ்சம் கொடுத்து வாங்கி அதன் மூலம் ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை சீர்குலைத்த பாசிச ராஜீவ் கும்பலின் அற்பத்தனம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

மாதம் ரூ.50 இலட்சம்! இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டு விடுதலைப் புலிகள் மறுவாழ்க்கை பெறும் வரை அவர்களின் பராமரிப்பிற்கு மாதாமாதம் இந்த தொகை இந்திய அரசால் விடுதலை புலிகளுக்கு கொடுக்கப்படும் என ராஜீவ் காந்தியும பிரபாகரனும் பேசி ஒப்பந்தம் போட்டிருந்தார்களாம்!

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள செய்வதற்காக பிரபாகரனுக்கு இந்த பணத்தை நாங்கள் கொடுக்கவில்லை என்று இந்திய அரசு சொல்கிறது. நாங்களும் அப்படி வாங்கவில்லை என விடுதலை புலிகளும் அறிவித்துள்ளனர். இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி விடுதலைப் புலிகள் செய்து வந்த வரிவசூல் நிறுத்தப்பட வேண்டும்; அதனால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும் அதன் மூலம் விடுதலைப் புலிகளின் பராமரிப்பை தொடர்ந்து செய்யவும் இந்தப் பணம் கைமாறியதாக இரு தரப்பினரும் ஒப்புக் கொள்கின்றனர்.

போபார்ஸ் பீரங்கி பேரத்தில் ரூ.65 கோடிக்கு மேல் பாசிச ராஜீவ் கும்பல் இலஞ்சமாக பெற்றது ஊரறிந்த உண்மை. ஆனால், இந்த ஒப்பந்தத்தை எங்களுக்கு சாதகமாக முடிக்க நாங்கள் யாருக்கும் இலஞ்சம் கொடுக்கவில்லை; அதே சமயம் இந்த ஒப்பந்தம் ஏற்பட தகவல் திரட்டியது, தகவல் தொடர்பிற்கு உதவியது போன்றவைகளில் உதவிய சிலருக்கு, அவர்கள் பட்ட சிரமத்திற்கு ஈடாக ஒரு தொகையை 'வைண்டிங் அப் சார்ஜாக' கொடுத்தோம்; இதற்கும் ஒப்பந்தத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொல்கிறார்களோ? அப்படிதான் பாசிச ராஜீவ் கும்பலும் பாசிஸ்ட் பிரபாகரன் கும்பலும் சொல்கின்றன; இலஞ்சம் இல்லையாம்! புனர்வாழ்விற்கான பணம்தானாம்!! இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையாம்!!!

இது தொடர்பாக, விளக்கம் அளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் பின்வருமாறு சொல்கிறார்:

''உடன்பாடு அமுலுக்கு வந்தபின், இந்த 'வரிவசூலிப்புகள்' நிறுத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்ட போது, இடைக்கால நிர்வாகம் அமுலுக்கு வரும்வரை, அவருடைய அணிகளுக்கு வேலைகள் அளிக்கப்படும் வரை தனது அணிகளுக்கு உதவ நிதி கொடுக்கப்பட வேண்டும் என பிரபாகரன் கேட்டுக் கொண்டார். இல்லையானால் அவர்களுடைய விசுவாசத்தைத் தக்க வைப்பது தனக்கு மிகமிக சிரமமாகி விடும் என்றும் தெரிவித்தார்''

''இராணுவப் பாதையிலிருந்து அமைதியான ஜனநாயக அரசியலுக்கு மாறுகின்ற கடுமையான நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளுக்கு உதவவே இடைக்காலமாக நிதி உதவி தர இந்திய அரசு ஒப்புக் கொண்டது''



படிப்பகம்

www.padippakam.com

''விடுதலைப் புலிகள் காரணத்தைப் பார்க்குமாறு செய்யவும், வன்முறையைக் கைகழுவவும். ஆயுதத்தை கீழே போட்டு ஜனநாயகப் போக்கில் பங்கு கொள்ளவும் அதன் மூலம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் தமிழர்களுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டிருக்கும் நியாயமான உரிமைகள் முழுவதும் அடையப்படவும் இந்திய அரசாங்கம் தனது வழியை விட்டுச் சென்றது என்று மீண்டும் அமைச்சர் வலியுறுத்தினார்''

—இவை எல்லாம் மறைக்க முயன்றும் அமைச்சரையும் மீறி உண்மை வெளிவந்ததையே காட்டுகின்றன. இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு சாதகமாக விடுதலைப் புலிகளின் அணிகளை சரிகட்ட பிரபாகரனுக்கு பணம் கொடுக்கப்பட்டது என்பது தான் உண்மை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதற்கு கைமாறாக பிரபாகரன் தனது அமைப்பிற்கு பணம் பெற்றார் என்பதை மறுத்து விடுதலைப் புலிகள் இயக்கம் கீழ்க்கண்டவாறு விளக்கம் தருகிறது:

''இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பிரபாகரன் நடத்திய விவாதத்தின் போது, இந்தியத் தலைவர் கொடுத்தச் சில விளக்கங்கள் மற்றும் உறுதிமொழிகளைத் தொடர்ந்து படிநிலைகளில் ஆயுதங்களை சரணடையச் செய்வோம் என பிரபாகரன் உறுதி அளித்தார். தனது மக்களின் நலன்களை மேம்படுத்துவதாகவும் அவர்களுடைய வாழ்க்கைக்குப் பாதுகாப்பு கொடுப்பதாகவும் ஒப்பந்தம் இருக்குமானால் அதை நிறைவேற்ற ஒத்துழைப்பதாகவும் பிரபாகரன் வாக்களித்தார்''

''இந்த பேச்சுவார்த்தைகளின் போது, விடுதலைப் புலிகள் மேல் நிலை வகிக்கும் படியான ஓர் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும் என ராஜீவ்காந்தி வாக்களித்தார். தமிழ் அகதிகளை மீண்டும் குடியிருப்பு செய்யவும் அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும் நிதி தருவதாகவும் ராஜீவ் காந்தி வாக்களித்தார். எங்களது விவாதத்தைத் தொடர்ந்து எங்கள் அமைப்பினுடைய வருவாய்க்கு முக்கிய மூலமாக இருந்து வரியமைப்பு முறையை நாங்கள் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு நட்ட ஈடாக, இடைக்கால அரசு அமைக்கும் வரை, மாதம் ரூ.50 இலட்சம் வழங்கப்படும் என்றும் முன்வைக்கப்பட்டது.

''இந்திய அரசாங்கம் ரூ.50 இலட்சம் தந்தது என்பதை உறுதிப்படுத்த நாங்கள் விழைகிறோம். அதன்பின், இடைக்கால அரசு அமைக்கும் யோசனை சீர்குலைந்ததை தொடர்ந்து இந்தியா தனது வாக்குறுதியை திரும்பப் பெற்றுக் கொண்டது. எனவே, இந்திய அரசாங்கம் அளித்த பணத்திற்கும் ஒப்பந்தத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. மாறாக, அது ஓர் இடைக்கால அரசு அமைப்பதோடும் எங்களது மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதோடும் எங்களது அணிகளைப் பராமரிப்பதோடும் சம்பந்தப்பட்டிருந்தது''

ஈழ மக்களின் புனர்வாழ்விற்காகவும் அணிகளின் பராமரிப்பிற்காகவும் பணம் பெற்றிருந்தால் அதை ஏன் விடுதலைப் புலிகள் பகிரங்கமாக அறிவிக்கவில்லை? வெளியில் சொல்ல முடியாத அளவிற்கு அதில் ஏதோ அசிங்கம் இருப்பதனால்தானே! மக்களின் செல்வாக்கோடு வாழ்ந்து கொண்டிருப்பதாக சொல்லும் விடுதலைப் புலிகள் தங்களது பராமரிப்புத் தேவையை மக்களிடமிருந்து தாராளமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கலாமே? அதுதானே ஒரு போராளி செய்ய வேண்டியது.

'ஒப்பந்தம் எங்கள் மீது திணிக்கப்பட்டது; இது இந்தியாவின் இழிவான நடவடிக்கை; எமது மக்களுக்கு செய்யப்பட்ட ஒரு மன்னிக்க முடியாத துரோகம்' என்றெல்லாம் இந்திய அரசாங்கத்தை சாடும் விடுதலைப் புலிகள் அந்த இந்திய அரசாங்கத்திடமிருந்தே தங்களது பராமரிப்பிற்கு பணம் பெற்றார்கள் என்றால், 'மீன் விற்ற காசு நாற்றமடிக்காது' என்பதாலா? 'மன்னிக்க முடியாத துரோகம் செய்தவனிடமிருந்து என்னுடைய வாழ்க்கையை நடத்த பணம் தா என்று கேட்டால் அதற்கு பெயர் பிச்சை என்று பொருள்! இப்படி இரந்துண்டு வாழ்வதை விட விடுதலைப் போரில் இறந்து வாழ்வது ஆயிரம் மடங்கு உன்னதமானது!

வரிவசூல் செய்வதை நிறுத்திக் கொள்கிறோம் என்றால் என்ன அர்த்தம்? வரிவசூல் செய்கிற அளவிற்கு தமக்கு இருக்கிற அதிகாரத்தை, போட்டி அரசாங்கத்தை தாரை வார்க்கிறோம் என்று தான் அர்த்தம்! தங்களுடைய அதிகாரத்தை புலிகள் தங்களது பராமரிப்பிற்காக பரிமாற்றம் செய்தார்கள் என்றால் அது தங்களையே அவர்கள் விற்றுக் கொண்டதாக அர்த்தம். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் சொல்லப்படும் பிராந்திய கவுன்சில்கள் என்ற மாநில அரசில் பங்கேற்க தங்கது போட்டி அரசாங்கத்தைக் கலைத்து விட பணத்தைப் பெற்று கொண்டு விடுதலைப் புலிகள் முன் வந்தார்கள் என்றால், அதற்குப் பெயர் ஒப்பந்தத்தை அமுல்படுத்த இலஞ்சம் பெற்றது தவிர வேறென்ன?

விடுதலைப் புலிகள் பணம் பெற்ற செய்தியை முதன் முதலில் வெளியிட்டது இலங்கைக்கான இந்திய தூதர் தீட்சித் தான்! பாசிச ராஜீவ் கும்பல் திட்டமிட்டு நேரம் பார்த்து இச்செய்தியை வெளியிடுகிறது என்றே கருதுகிறோம். விடுதலைப் புலிகளை அம்பலப்படுத்துவது, தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் ஈழப் போராளிகளுக்குள்ள தார்மீக ஆதரவை பலமிழக்க செய்வது, தமிழ்நாட்டில் வரப்போகிற தேர்தலில் ஈழப்பிரச்சினையை வைத்து ஆதாயம் தேட நினைக்கும் கட்சிகளின் திட்டத்தை முறியடித்து தனது வோட்டுப் பொறுக்கும் வாய்ப்பை அதிகரித்துக் கொள்வது என்ற நோக்கங்கள் இதற்கு இருக்கின்றன என நாங்கள் கருதுகின்றோம்.

'ஈழப் போராளி அமைப்புகளின் சூத்திரதாரியே 'ரா' தான்; பயிற்சி, பண ஆயுத உதவி உட்பட அனைத்தையும் கொடுத்து தனது கைப்பாவைகளாக போராளி அமைப்புகளை ரா ஆட்டி வைக்கிறது; தனது தலைமையை மட்டும் ஈழப் பிரதிநிதியாக அங்கீகரிக்கும் பட்சத்தில் இந்திய அரசின் கைப்பாவையாக இருப்பதற்கு புலி பிரபாகரன் தயாராக உள்ளார்' என புதிய ஜனநாயகம் ஏற்கனவே அம்பலப்படுத்தி வந்துள்ளது. இந்த உண்மைக்கு கிடைத்த மேலும் ஒரு சாட்சிதான் ஒப்பந்தத்தை நிறைவேற்ற பிரபாகரன் கையூட்டு பெற்ற கயமைத்தனம்.

அதே வேலையில், பிளாட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப், இ.என்.டி.எல்.எஃப் ஆகிய 'போராளி' அமைப்புகள் இந்திய ஆக்கிரமிப்புப் படையின் அடியாள் கூட்டமாக செயல்படும்போது, விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளின் தலைமை பாசிசத் தன்மை கொண்டதுதான். எந்த கணத்திலும் அது போராட்டத்தை காட்டிக் கொடுத்து விட்டு இழிவானதொரு சமரசத்திற்கு போகக்கூடிய அளவிற்கு ஊசலாட்ட தன்மை கொண்டதுதான். அது எதிரியுடன் இரகசியமாக பேரம் நடத்துகிறது; இந்திய ஆக்கிரமிப்புப் படையை எதிர்த்து போராடும் புரட்சிகர சக்திகளையும் உண்மையான

படிப்பகம்

www.padippakam.com

போராட்ட சக்திகளையும் ஒடுக்குகிறது; கொலை செய்கிறது. தனது ஆதிக்கம் மட்டுமே இருக்க வேண்டும் என்பதற்காக தமிழர் உட்பட உழைக்கும் மக்களிடம் பாசிச முறைகளை மேற்கொள்கிறது என்பதும் தெரிந்தது தான்.

எனினும், இலங்கையின் பிரதான எதிரியான இந்திய ஆக்கிரமிப்பாளர்களை விடுதலைப்புலிகள் எதிர்த்துப் போராடுவதில் ஊன்றி நிற்கும் வரை, தேசிய விடுதலைப்போர் என்ற அடிப்படையில் அவர்களை நேச சக்திகளாக அணுகுவதே சரியாக இருக்கும். இலங்கையின் புரட்சிகர இயக்கங்களின் கண்ணோட்டத்தில், இன்றைய நிலையில், விடுதலைப் புலிகளை இரண்டாம் பட்ச எதிரிகளாகவே அணுக வேண்டும்; பிரதான எதிரிக்கு எதிராக இரண்டாம்பட்ச எதிரியுடன் கூட்டு சேருவது சரியானதே. அதே சமயத்தில், பிரதான எதிரியான இந்திய ஆக்கிரமிப்பு படைக்கு எதிரான போராட்டத்தை புரட்சிகர சக்திகள் எந்த அளவிற்கு முன்னெடுத்துச் செல்கிறார்களோ அந்த அளவிற்கே விடுதலைப் புலிகளின் செல்வாக்கை உடைக்க முடியும்; அவர்களின் மேல்நிலையைத் தகர்க்க முடியும். மாறாக, விடுதலைப் புலிகளின் பாசிச நடவடிக்கைகள், கடந்த கால துரோகங்கள் ஆகியவைகளினால் உணர்ச்சி வசப்பட்டு அவர்களைப் பிரதான எதிரியாகவோ, அல்லது விடுதலைப் புலிகளையும் இந்திய ஆக்கிரமிப்புப் படையையும் சமமான எதிரிகளாக வைத்தோ செயல்படுவது சரியானதாகாது. தூய புரட்சிக்காரர்களாக காட்டிக் கொள்ள மட்டுமே பயன்படும்; எதார்த்தத்தில் இது இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான முனையை உடைத்து மறைமுகமாக உதவவே செய்யும்.

எனவே, ஒரு பக்கம் விடுதலைப் புலிகளின் பாசிச நடவடிக்கைகள் அதன் கடந்தகால துரோகங்கள் நிகழ்கால ஊசலாட்டங்கள், இரகசிய பேரங்கள் ஆகியவைகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தும் போதே, பிரதானமாக இந்திய ஆக்கிமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் முன்னணிப்படையாக, நடைமுறையில் உருவாக இலங்கையின் புரட்சிகர சக்திகள் தமது கவனம் முழுவதையும் சக்தி முழுவதையும் குவிக்க வேண்டும்.

**வண்டார் குழலி மணாளன்**

# மின்வாரியம்: லஞ்ச வாரியம்

நின்னம்பிக்கையுடன், தோளில் துண்டைப் போட்டுக்கொண்டு கம்பீரமாக, நீர் இறைப்பு இயந்திரத்திற்கு மின் இணைப்பு கோரி, மின்வாரியம் செல்லும் விவசாயி, மின் இணைப்பு பெறும் காலத்திற்குள், தோளில் தொங்கிய துண்டை தலையில் போட்டுக் கொண்டு இடிந்துபோய் வேதனையுடன் திரும்பும் நிலை; இது, 'திறமை'யான அதிகாரவர்க்க ஆட்சியான கவர்னர் ஆட்சியிலும் மாறவில்லை. இதற்கு, தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம் புதுப்பட்டு மின்வாரிய அலுவலகம் ஒரு உதாரணம். அங்கு தலைமை வகிக்கும் இளநிலை பொறியாளர் ராமலிங்கத்தின் அக்கிரமம் ஒரு நீண்ட புராணம். அதை சுருக்கித் தருகிறோம்.

நீர் இறைப்பு இயந்திரமும், அதற்கு வேண்டிய மற்ற பொருள்களும் வாங்கவே விவசாயி பல்வேறு கடன்களில் சிக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் புதுப்பட்டு மின்வாரியத்தின் ஒவ்வொரு அசைவுக்கும் லஞ்சம் கொடுக்க விவசாயி படும்பாடு சொல்லொணாத் துயரம் மிக்கது. மனு செய்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு சர்வீஸ் கிடைக்கிறது. அது நழுவிப் போய்விடக் கூடாதே எனும் விவசாயினுடைய வேதனையைப் பயன்படுத்தி கொள்ளையடிக்கிறார்கள். சொல்லப் போனால் கொள்ளையடிப்பதற்காகவே பல்வேறு சம்பிரதாயங்கள், நடைமுறைகள், இழுத்தடி ஆகியவற்றைப் பின்பற்றுகிறார்கள். விவசாயிகளிடம் பல்வேறு கட்டங்களிலும் மின்வாரிய அதிகாரிகள் பெறும் லஞ்சம் ரூபாய் 3,000க்கும் அதிகம். மின் இணைப்புக் கேட்டு விண்ணப்பம் கொடுப்பதிலிருந்து ஆரம்பமாகும் இலஞ்சம் கடைசியாக மின் இணைப்புக் கொடுக்க வரும் இளநிலை பொறியாளர் ராமலிங்கம் அவரது கீழ்மட்ட ஊழியர் வாங்கும் லஞ்சம்வரை சங்கிலித் தொடராக நீண்டு கொண்டு போகும்.

லஞ்சம் கொடுத்தாலும், மின் இணைப்பு வாங்குவதற்கு படும் அவஸ்தை, அலைச்சல், இழுத்தடிப்பு ஆகியவை இருக்கிறதே! அது கொடுமையானது. கட்டிய பணம் செலுத்தியதற்காக பெற்றுக் கொண்ட 'பில்'லில், விவரத் தாள்களில், பெயரில் ஏதேனும் ஒரு எழுத்துப்பிழை இருந்தாலும் (அப்பிழை அவர்களே செய்ததுதான்) வேலையை இழுத்தடிப்பார்கள். அவ்வேலைக்காக கிராம அதிகாரியைப் பார்ப்பதற்கே பலமுறை நடந்து கால்கடுத்து போகும். அவர் கொடுக்கும் வரைபடத்தில் ஏதேனும் தவறு இருந்துவிட்டால் திரும்பவும் அலைச்சல்தான்.

மேலும், லஞ்சம் கறப்பதற்கு மின்வாரியத்தில் ஒரு புது நடைமுறையைக் கடைபிடிக்கிறார்கள். மின் இணைப்பு கொடுக்கும் கட்டத்தில் பல வருடங்களுக்கு முன் மின் இணைப்புக் கேட்டு கொடுத்த விண்ணப்பம் காணாமல் போய்விட்டதென்று சொல்லுவார்கள். இந்த நேரத்தில் ஒவ்வொரு விவசாயியும் மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது மாதிரி நடுங்கிக் கொண்டிருப்பார். பெரும்பாலும் இதிலிருந்து யாரும் தப்பித்ததாக தெரியவில்லை. மனு காணாமல் போய்விட்டால் மின்வாரிய இழுத்தடிப்பு மாறி வருவாய்த்துறையோடு மல்லுக்கு நிற்க வேண்டும். கிராம நிர்வாக அதிகாரி, வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் என திரும்பவும் பணத்தைத் தூக்கிக் கொண்டு அலைய வேண்டும்.

எல்லாம் முடிந்து மின் இணைப்பு பெற்று விட்டால், விவசாயி ஒருமலையைப் புரட்டிவிட்ட மகிழ்ச்சியோடு ஒரு நிம்மதிப் பெருமூச்சு விடுவார். அந்த நிம்மதியும் கொஞ்ச நேரம்தான்; நீர் இறைப்பு இயந்திரத்திற்காக வாங்கிய கடன் ரூபாய் பத்தாயிரமும், அதற்குரிய வட்டியும் லஞ்சம் கொடுக்க வாங்கிய கடனும் அதற்கான வட்டியும் பூதாகரமாய் முன்னே வந்து நிற்கிறது.

மேலே கண்ட மின்வாரிய ஊழல் புதுப்பட்டில் மட்டுமல்ல; அருகிலுள்ள சங்கராபுரத்திலும் இதே போன்ற ரேட்டுகள்; அல்லது இதைவிட அதிகம். புதுப்பட்டிலுள்ள இராமலிங்கம் புதிய இணைப்புகளில் தோராயமாக ரூபாய் 3 லட்சம் வரை முழுங்கியிருப்பார்! இதேபோல தமிழ்நாட்டின் எத்தனை இராமலிங்கங்கள் விவசாயிகளின் ரத்தத்திலிருந்து எத்தனை கோடிகளை உறிஞ்சியிருப்பார்களோ?

**தகவல்:**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**கல்லை வட்டம்**



படிப்பகம்

www.padippakam.com

புரட்சிகர இயக்கங்களை நேரடியாக வெறிகொண்டு ஒடுக்கியும் திரிபுவாதிகளின் மூலம் திசை திருப்ப முயற்சித்தும் முடியாமல் போகும் போது, ஏகாதிபத்திய வாதிகளும், அதன் அடிவருடிகளும் தன்னார்வக் குழுக்கள் மூலம் சீர்குலைக்க முயற்சிப்பது உண்டு. ஏகாதிபத்தியங்களால் ஊட்டி வளர்க்கப்படும் வளர்ப்புப் பிராணிகளான இத்தகைய தன்னார்வக் குழுக்களை ஒன்றுசேர்த்து ஒரு மையம் அமைத்தால் எப்படியிருக்கும்? அந்த சீர்குலைவு மையத்தை நக்சல்பாரி இயக்கத்தின் வெகுஜன அமைப்பு என்று பெருமையோடு அழைத்துக் கொண்டால் இன்னும் எப்படி இருக்கும்? சொல்லில் புரட்சியும், செயலில் சீர்குலைவுமாகத்தான் இருக்கும்.

தன்னார்வக் குழுக்களின் மையமாகத் திகழும் இந்திய மக்கள் முன்னணி தோற்றத்தில் கழுதை குட்டி போல அழகாகத்தான் இருந்தது. நீண்டகால சிறைவாசமும், சித்திரவதையும் தாங்கிய முன்னாள் நக்சல்பாரித் தலைவர் நாகபூஷண் பட்நாயக் இந்த அமைப்பின் தலைவராக இருப்பதைக் காட்டி புரட்சிகர அணிகளை ஏய்க்கப் பார்த்தார்கள். நாட்டிலேயே பெரிய நக்சல்பாரிக் குழுவான வினோத் மிஸ்ரா குழுவின் வெகுஜன அமைப்பு மக்கள் முன்னணி என நப்பாசைக் காட்டி புரட்சிகர அணிகளுக்கு வலை வீசிப் பார்த்தார்கள். ஆனால் நக்சல்பாரி புரட்சியாளர்கள் இப்போலிகளின் முகவிலாசத்தையும் தகிடுதத்தங்களையும் விடாப்பிடியாக அம்பலப்படுத்தி வந்தார்கள். சமீபத்தில் டெல்லியில் மார்ச் 20-23 தேதிகளில் மாநாடு கூட்டி தீர்மானம் போட்ட மக்கள் முன்னணியினர் புரட்சியாளர்களின் கூற்றை நிரூபிக்கும் வகையில் மூக்கு வெளுத்து, நாலாந்தர ஓட்டுக் கட்சியாக தம்மை காட்டிக் கொண்டுள்ளனர்.

உலக மேலாதிக்க வல்லரசான ரஷ்யா சமூக ஏகாதிபத்தியம் அல்லவாம்; சோசலிச நாடாம்! மக்கள் முன்னணியினர் இப்படியொரு பைத்தியக்காரத்தனமான முடிவை எடுத்துள்ளார்கள். குட்டி பதினாறு அடி பாய்ந்தால் தாய் எட்டடியாவது பாயாமல் இருக்குமா? மக்கள் முன்னணியின் தலைமை அமைப்பான வினோத் மிஸ்ரா குழுவினர் கடந்த ஜனவரியிலேயே ரஷ்யாவை 'சோசலிச நாடு' என்று அங்கீகரித்து அறிக்கையும் வெளியிட்டுள்ளார்கள்.



சாருமஜும்தாருக்கு சிலை! லட்சியத்துக்கு துரோகம்!

# புரட்சியின் பார்வையில் போலிகள்

திடீரென ரஷ்யாவை சோசலிச நாடு தான் என்று அரிய கண்டுபிடிப்பு செய்ததைப் பற்றி மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கூறும் போது ''முன்பு சீனா கூறுவதை வேத வாக்காக ஏற்று வந்தோம். இன்று நாங்கள் யாருக்கும் வால் பிடிக்கத் தயாராக இல்லை. ரஷ்யாவை சமூக ஏகாதிபத்தியம் என்று சீனா கூறினால் நாங்கள் ஏற்க வேண்டுமா என்ன?'' என்று சித்தாந்த விளக்கம் தருகிறார்.

சுயமாக சிந்திப்பதாகக் கூறிக் கொண்டு கடைசியில் இடது வலது போலி கம்யூனிஸ்டுகளின் வாலைப் பிடித்துக் கொண்டு மக்கள் முன்னணியினர் ஓடுவதுதான் வேடிக்கையாக இருக்கிறது. போலிக் கம்யூனிஸ்டுகள் ரஷ்யாவை சோசலிச நாடாக பயபக்தியுடன் ஏற்று, ஓட்டுக்கும் சீட்டுக்கும் எல்லா பிற்போக்கு கட்சிகளிடமும் கூட்டுச் சேர்ந்து காலை நக்குவதைப் போல, மக்கள் முன்னணியினரும் போட்டியில் இறங்கிவிட்டனர். தேர்தல்களில் ஊக்கமாக பங்கேற்பது, 'இடதுசாரி' சக்திகளின் ஐக்கியத்திற்காக 'இடது'- வலது போலிக் கம்யூனிஸ்டுகளுடனும் இன்னும் பல உதிரி குழுக்களுடனும் கூட்டு சேர்வது, ராஜீவின் சுயேச்சதிகார ஆட்சியை வீழ்த்த புரட்சிகர ஜனநாயக தேசியமாற்று என்ற பரந்து விரிந்த கூட்டணியை நிறுவ வி.பி. சிங்குடன் கூட்டு சேர்வது என்ற கடைகோடித்தனமாக முடிவுகள் எடுத்துள்ளார்கள்.

இதற்கு சுருதி சேர்ப்பது போல 'மார்க்சிஸ்ட்' கட்சியிலிருந்து விலகி பீகாரில் தனிக்குழுவாக இயங்கிவரும் ஏ.கே. ராய் குழுவும் ரஷ்யாவை 'சோசலிச நாடு' என்றும், எல்லா வேறுபாடுகளையும் களைந்து கம்யூனிஸ்ட்கள் ஐக்கியப்பட வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்துள்ளது.

வினோத்மிஸ்ரா குழுவும், அதன் வெகுஜன அமைப்பான மக்கள் முன்னணியும் பாராளுமன்றப் பன்றித் தொழுவத்துக்குப் படையெடுக்க முடிவெடுத்ததற்கு அனுபவம்தான் காரணமாம்! பாராளுமன்றத்தை ஒரு மேடையாக பாவித்து மக்களை அரசியல் படுத்தி அணி திரட்டிய பின்னரே ஆயுதப் போராட்டத்தை தொடுக்க முடியும்' என்று தமது அரிய 'அனுபவங்களை' அடுக்குகிறார்கள். ஏதோ புதிய அனுபவங்களை கூறுவார்கள் என்று எதிர்பார்த்தால், ஐயோ பாவம்! போலிக் கம்யூனிஸ்ட்கள் நீண்டகாலமாக கடைவிரித்து போணியாகாத கருத்துக்களையே இவர்கள் வாந்தியெடுக்கிறார்கள்.

மக்கள் முன்னணியினரின் 'சோசலிச ரஷ்யா'வில் பிரஸ்டோரிகா கொள்கையை அறிவித்து அப்பட்டமாக தனியார் முதலாளித்துவத்தை அதிபர் கோர்பசேவ் அரங்கேற்றி வருவதைப் போல, தன்னார்வக் குழுக்களும் தமது பிரஸ்டோரிகா திட்டப்படி வினோத்மிஸ்ரா குழுவையும் மக்கள் முன்னணியையும் ஒருவழியாக ஓட்டுப் பொறுக்கிக் கட்சியாக சீரழித்துவிட்டன. வாலறுந்த நரியாக வலம்வரும் மக்கள் முன்னணியைக் காட்டி, புரட்சிப் பாதையைக் கைவிட்டு ஓட்டுப் பொறுக்க வருமாறு நக்சல்பாரி புரட்சியாளர்களையும் அணிகளையும் முதலாளித்துவப் பத்திரிக்கைகள் ஆசைகாட்டி அழைக்கின்றன. ஆனால் எல்லாவகை சந்தர்ப்பவாதங்களுக்கும் எதிராகப் போராடி மக்கள்திரள் பாதையில் உறுதியாக முன்னேறிவரும் புரட்சியாளர்கள் இந்தத் தேன்தடவிய தோட்டாக்களுக்கு ஒருபோதும் பலியாகப் போவதில்லை.

—குமார்

படிப்பகம்

www.padippakam.com



# ஆக்கிரமிப்புப் படைகள் விலகினால் அமைதி திரும்புமா?

வல்லூறு பிடியில் சிக்கிய மாடப்புறாவும் வல்லரசுகளின் கையில் சிக்கிய ஒரு நாடும் எப்படியெல்லாம் கொத்தி குதறப்படும் என்பதற்கு ஆப்கன் நாடு ஒரு எடுத்துக் காட்டு. கூடவே மதவெறி என்ற மலைப்பாம்பும் சேர்ந்து கொண்டால்.... அப்படிப்பட்ட நிலையில் தான் ஆப்கன் மக்கள் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

தோல்வி, அவமானம்; சோசலிச முகமூடி கிழிபடுவது; இருந்தும் இலட்சத்திற்கும் மேற்பட்ட தனது ஆக்கிரமிப்பு படையை ஆப்கானிஸ்தானத்திலிருந்து திரும்பப் பெற முடியாது என கர்வத்தோடு சொல்லி வந்தது ரஷ்ய வல்லரசு. இப்படி இருக்கும் போதுதான் இவ்வருடம் பிப்ரவரி மாதம் 8ம் தேதி ரஷிய அதிபர் கோர்பசேவ் திடீரென்று ஓர் அறிவிப்பு விட்டார். மே மாதம் 15ம் தேதியிலிருந்து ரஷிய படைகள் வாபசாக தொடங்கும்; 10 மாதத்தில் மொத்தப்படையும் திரும்பிவிடும்; மார்ச் 15ம் தேதிக்குள் ஒப்பந்தம் ஏற்பட்டால் மே 15க்கு முன்பேகூட வாபஸ் தொடங்கிவிடும் என்றும் அறிவித்தார்.

உலக சமாதானம்! இதன் மீது கோர்பசேவ் வைத்துள்ள கரைகாணா காதல்தான் இதற்கு காரணம் என்று சிலர் கத்துகிறார்கள்; அப்படி ஒரு புடலங்காயும் கிடையாது.

துரோகி குருச்சேவ்— பிரஷ்னேவ் கும்பல் ரஷியப் பாட்டாளி வர்க்கக் கட்சியையும் சோசலிச ஆட்சியையும் கைப்பற்றி அதை சமூக ஏகாதிபத்தியமாகச் சீரழித்ததன் விளைவாக உருவான பொருளாதார நெருக்கடி இன்று முற்றி தீவிரமாகிவிட்டது. உள்நாட்டில் தீராத உணவுப் பற்றாக்குறையாலும் நுகர்பொருள் தேவையை ஈடு செய்ய முடியாததாலும் கலவரங்களும் அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டு விடுமோ என்று கோர்பசேவ் கும்பல் அஞ்சுகிறது. உள்நாட்டில் அரசியல்— பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டால் உலகமேலாதிக்கப் போட்டியில் அமெரிக்காவை விஞ்ச முடியாமல் போய்விடுமோ என மிரள்கிறது.

எனவே கிளாஸ் நாஸ்ட்- பிரஸ்டோரிகா கொள்கையை அறிவித்து தனியார் முதலாளித்துவத்தையும் கலாச்சாரத்தையும் அப்பட்டமாகத் திறந்து விட்டு நெருக்கடியைத் தற்காலிகமாகத் தீர்ப்பது, இதோடு கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி விண்வெளி நட்சத்திரப் போரில் அமெரிக்காவை உடனடியாக விஞ்ச சாத்தியமில்லாத நிலையில் காலத்தையும் மூலதனத்தையும் பெறுவதற்காக சமாதானக் கொடியை தூக்கிப் பிடிப்பது என்ற திட்டத்தில் இறங்கியிருக்கிறது கோர்பசேவ் கும்பல். ரஷிய கரடி இப்போது பின்வாங்குவது, உள்நாட்டு நிலைமையை சீர்படுத்தி பின்பு மூர்க்கமாகப் பாய்வதற்குத்தான்.

'எந்த அன்னிய தலையீடும் கூடாது! ஆப்கன் தலைவிதியை ஆப்கன் மக்கள் மட்டுமே தீர்மானிக்க வேண்டும்; எந்த நிபந்தனையும் இல்லாமல் ரஷிய ஆக்கிரமிப்புப் படைகள் உடனடியாக திரும்பப்பெறப்பட வேண்டும்' என கோர்பசேவ் அறிவிப்பு வரும் வரை அமெரிக்காவும் பாகிஸ்தானும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தன. ஏதோ ஜனநாயகத்தின் மீதும் நாடுகளுடைய சுதந்திரத்தின் மீதும் வற்றாத பற்று கொண்டிருக்கும் உத்தமர்கள் போல உரக்க கூவி வந்தார்கள். 'திருடாதே' என்று கோழித் திருடனுக்கு ஆடு திருடன் உபதேசம் செய்வது போல!

பல்டி! படையை வாபஸ் வாங்குகிறேன் என ரஷியா சொன்னதற்குப் பின் பாகிஸ்தான் பல்டி அடித்துவிட்டது. ஆப்கானிஸ்தானில் அடிவருடி நஜிபுல்லா தலைமையில் உள்ள அரசை அகற்றிவிட்டு அந்த இடத்தில் முஜாஹீதின் கலகக் காரர்களுக்கு ஆதிக்கம் தரும் வகையில் ஓர் இடைக்கால அரசாங்கத்தை அமர்த்திவிட்டுத்தான் ரஷிய படைகள் வாபஸ் வாங்கப்பட வேண்டுமென பாகிஸ்தான் அடம் பிடித்தது. 'ரஷிய படை வாபஸ் வாங்குவதை மேற்பார்வையிடுவது, தேர்தல் நடத்துவது, பாகிஸ்தானிலுள்ள 30 லட்சம் அகதிகள் உட்பட ஈரான் மற்றும் பிற நாடுகளில் உள்ள மொத்தம் 50 லட்சம் அகதிகள் நாடு திரும்ப ஏற்பாடு செய்வது' ஆகியவை இடைக்கால அரசின் பணியாக இருக்க வேண்டும்; இதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என பாகிஸ்தான் வம்பு செய்தது.

இதற்கு பின்னணிக் காரணங்கள் சில இருக்கின்றன. 'ஆப்கன் முஜாஹீதின் இஸ்லாமிய ஐக்கியம்(IUAM) என்ற கூட்டணியில் இருக்கும் முஜாஹீதின் கலகக் காரர்கள் ஏழு பிரிவாக உள்ளனர். இன்னொரு பக்கம் இவர்கள் முஸ்லிம் மத வெறியர்கள், அரசு பரம்பரையை ஆதரிக்கும் பழைமைவாதிகள், மிதவாதிகள் எனவும் மூன்றாகப் பிரிந்துள்ளார்கள். முஸ்லிம் வெறியர்களேகூட சன்னி, ஷியா என இரு பிரிவுகளாக உள்ளனர். இன்னும் பாகிஸ்தானிலும் மேற்கத்திய நாடுகளிலும் உள்ள கணிசமான செல்வாக்குக் கொண்ட ஆப்கன் குட்டி முதலாளித்துவ அரசியல் பிரதிநிதிகள் வேறு உள்ளனர். இவர்களையெல்லாம் ஒன்றாக இணைத்தது ரஷிய எதிர்ப்பு- வெறுப்பு தான்; ரஷிய படைகள் திரும்பி வந்தால், இவர்கள் ஆளுக்கு ஆள் அடித்துக் கொள்ளும் நிலைதான்.

ரஷிய அடிவருடி போலி கம்யூனிஸ்ட் கட்சியிலும் 'பார்ச்சம்' (நஜிபுல்லா சார்ந்திருப்பது), 'கல்க்' என்ற



படிப்பகம்

www.padippakam.com

இரு பிரிவுகள் உள்ளன. தீவிர முரண்பாடுகளும் உள்ளன.

மேலும், ஆப்கானிஸ்தான் என்றுமே அரசியல் ரீதியிலோ, இன ரீதியிலோ ஒற்றுமையாக ஆனது கிடையாது; வரலாற்று ரீதியிலும் பூகோள ரீதியிலும் பழங்குடிகள் அடிப்படையில் பிரிந்துள்ளார்கள். முஜாஹிதின் கலகக்காரர்கள் கூட பழங்குடி அடிப்படையில் பிரிந்துள்ளனர். பழங்குடி மற்றும் மத அடிப்படையிலான விசுவாசமே மேலோங்கியிருக்கிறது. தேசிய உணர்வு வலுப்பெறவில்லை.

ரசியப்படை திரும்பிப்போன பின்பு நஜிபுல்லா அரசு விழுமா? நீடிக்குமா? நீடித்தால், உள்நாட்டு யுத்தம் இப்போதிருப்பதைவிட தீவிரமாக தொடரும். நஜிபுல்லா அரசு விழுந்தால் அந்த இடத்திற்கு நான், நீ என ஒருவருக்கொருவர் போட்டி போட்டு அடித்துக் கொள்வர். கூட்டணி உடையும். எனவே, ரஷியப்படை போய்விட்டால் இப்போது இருப்பதைவிட குழப்பம் இன்னும் அதிகரிக்கும்; உள்நாட்டு யுத்தம் தீவிரமடையும். ஆப்கானிஸ்தானியர்களே ஒருவருக்கொருவர் மோதிக் கொள்வர். இன்னொரு லெபனான் உருவாகும்; இதனால் ஆப்கானிஸ்தான் நாடே சிதறி பல நாடுகளாக பிரியும் அபாயமும் உள்ளது.

இப்படிப்பட்ட நிலைமையில், பாகிஸ்தானில் உள்ள 30 லட்சம் ஆப்கன் அகதிகள் திரும்பிப் போகாமல் தங்கி விடுவார்கள்; ரஷியப்படை போய்விட்டதால் அமெரிக்காவும் நிதியுதவி தராது. ரஷியப்படை ஆபத்தைக் காட்டி அமெரிக்காவிடமிருந்து தாராள ராணுவ உதவி பெற முடியாது. அணுகுண்டு செய்ய அமெரிக்கா உண்மையாகவே தடை போடலாம். பொருளாதார ராணுவ ரீதியில் பாகிஸ்தானுக்கு இது பெரும் பாதிப்பு.

ஆப்கானிஸ்தானில் நடக்கும் உள்நாட்டு போர் - பிரிவினைப் போக்கு பரவி பாகிஸ்தானிலும் பற்றி எரியலாம்; ஏற்கனவே அங்கு அந்த நெருப்பு புகைந்து கொண்டுதான் இருக்கிறது.

ரஷியப்படை வாபஸ் ஆவதால் ஏற்படவிருக்கும் இந்த பாதிப்புகளை நினைத்தாலே பாகிஸ்தான் ஆளும் வர்க்கங்களின் நெஞ்சு படபடவென அடிக்கிறது; பதைபதைக்கிறது. அமெரிக்காவின் உலக மேலாதிக்க யுத்த நோக்கங்களுக்காக அடியாளாக செயல்படும் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானின் உள்நாட்டுப் பிரச்சனையில் தலையிட்டு வினை விதைத்தது. இப்போது வினையை அறுக்க வேண்டிய கட்டாயத்தால் கதி கலங்கி நிற்கிறது.



ரஷிய ஆக்கிரமிப்புப் படையை கதிகலங்க வைக்கும் முஜாஹிதின் கொரில்லாக்கள். காலடியில் ரஷியப் படையிடமிருந்து கைப்பற்றிய ஏவுகணை

இத்துடன் ஈரானும் ஆப்கானிஸ்தானில் தனது மூக்கை நுழைக்கிறது. ஈரானை ஆளும் ஆயாதுல்லாக்கள் ஷியா பிரிவு முஸ்லிம் வெறியர்கள். ஷியா பிரிவினர்தான் முஸ்லிம்களிடையே உயர்ந்தவர்கள் என திமிரோடு திரிபவர்கள். முஜாஹிதின்களில் உள்ள ஷியா பிரிவினரை தன்பக்கம் இழுத்து தலையிட முயல்கிறது. ரஷியாவும் இதைத் தூண்டி விடுகின்றது.

இதன் மூலம், ஈரானின் உதவியோடு ஆப்கனில் அமெரிக்க ஆதரவு சக்திகள் மேலாண்மை பெறாமல் தடுத்துவிட முயல்கிறது. கூடவே இது ஈரானை இன்னும் தீவிரமான அமெரிக்க எதிர்ப்பில் கொண்டு நிறுத்தும். அதன் மூலம் அண்டை நாடான ஈரானுடன் நட்பை வலுப்படுத்தி தரை மூலமாகவே உலக ரீதியில் யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த பாரசீக வளைகுடாவை அடையவும் கட்டுப்படுத்தவும் ரஷியா கணக்கு போட்டுள்ளது.

இந்தியாவையும் ஆப்கன் பிரச்சினையில் சம்பந்தப்படுத்த ரஷிய விரும்

படிப்பகம்

www.padippakam.com

புகிறது; அப்புறம் அமெரிக்க ஆதரவு பாகிஸ்தானை இந்தியா கவனித்துக் கொள்ளும்; இது ரஷியாவின் எண்ணம். என்ன முகாந்திரத்தில் இந்தியா நுழைவது? பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் உள்ள எல்லை பிரச்சனையான 'துராண்டு கோடு' பிரச்சனை மற்றும் இந்த பிராந்திய நாடு என்ற முகாந்திரங்களில் நுழைந்தது. தனக்கு சாதகமான விளைவுகள் ஏற்படும் வரை ஆப்கன் ஒப்பந்தத்தை இழுத்தடிப்பதற்காக எல்லைப் பிரச்சனையை பாகிஸ்தான் தான் கிளப்பியது. பிரச்சனையே இல்லை என நஜிபுல்லா அரசு சொல்லிவிட்டது. எனினும் பாகிஸ்தான் எல்லைப் பிரச்சனை பற்றி பேச விரும்பினால், இந்தியாவும் இதில் கலந்து கொள்ள வேண்டும்; ஏனென்றால் எல்லை இந்தியாவோடும் சம்பந்தப் பட்டுள்ளது என ஆப்கன் அரசு மேலும் சொல்லிவிட்டது. இந்தியா சம்பந்தப்படுவதை பார்த்த பாகிஸ்தான் அதற்குப்பின் இந்தப் பிரச்சனையை எழுப்பாமல் விட்டு விட்டது.

ஆசையோடு ஆப்கன் பிரச்சனையில் தலையிட்ட ராஜீவ் கும்பல் பேச்சு வார்த்தைக்கு டெல்லி வருமாறு ஜியாவுக்கு ஆணையிட்டுப் பார்த்தது. ஜியா நாசூக்காக மறுத்ததோடு வேறு மட்டங்களிலும் பேச முகம் சுளித்து தனது எதிர்ப்பைக் காட்டியதால், வேறு வழியின்றி பாசிச ராஜிவ் கும்பல் தனது வாலை சுருட்டிக் கொண்டது.

வருகிற ஏப்ரல் மாதம் 14ம் தேதி ஆப்கன் பிரச்சனை தொடர்பாக பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் ஒரு சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திடப் போவதாக கடைசியாக வந்த தகவல்கள் கூறுகின்றன. இதன்படி, மே 15ம் தேதியிலிருந்து ரஷியப்படை வாபஸ் தொடங்கும்; அன்னிய சக்திகள் இனி தலையிடா வண்ணம் சர்வதேச உத்தரவாதத்தை பிரகடனப்படுத்துதல்; பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் அடுத்தவர் விவகாரத்தில் தலையிடுவதில்லை, ஆக்கிரமிப்பு செய்வதில்லை; அகதிகள் தமது சொந்த விருப்பத்தில் ஆப்கானிஸ்தான் திரும்புவது ஆகியவை இந்த ஒப்பந்தத்தின் அம்சங்களாம். இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற அமெரிக்காவும் ரஷியாவும் உத்தரவாததாரர்களாக செயல்படுவராம்!

ஐ.நா. மத்தியஸ்தம் செய்ய ஜெனிவாவில் கையெழுத்தாகப் போகும் இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தவுடன் அன்னிய தலையீடின்றி இனி ஆப்கன் மக்கள் தங்களது சொந்த நாட்டின் தலைவிதியை தீர்மானித்துக் கொண்டு அமைதியாக வாழ முடியும் என்று யாராவது கருதினால் அது முட்டாள் தனம்.

ஏனென்றால், அமெரிக்கா தனது அடிவருடி முஜாஹிதின்களுக்கும் ரஷியா தனது அடிவருடி நஜிபுல்லா கோஷ்டிக்கும் தொடர்ந்து ஆயுத சப்ளை செய்வதென இரு வல்லரசுகளும் கூடி பேசி எழுதாத ஒப்பந்தம் ஒன்றை போட்டுள்ளன. ஒரு பக்கம் சமாதான ஒப்பந்தம் நிறைவேற உத்திரவாததாரர்களாக இருப்பார்களாம். இன்னொரு பக்கம் சண்டை போடும் கோஷ்டிகளுக்கு தொடர்ந்து ஆயுத சப்ளையும் செய்வார்களாம்! மேலும் ஏற்கனவே விவரித்த நிலைமைகள், அனைத்தும், இனிதான் ஆப்கானிஸ்தானில் உள்நாட்டு யுத்தம் தீவிரமடையும், ஆப்கன் மக்களின் ரத்தம் அதிகமாக சிந்தப்படும் என்பதையே காட்டுகின்றன. யாருடைய வேட்டைக்காக ஆப்கானிஸ்தானை ஆக்குவது என்பதற்கான போட்டியை தங்களது சண்டைச் சேவல்களை மோத விட்டு ரஷியாவும் அமெரிக்காவும் இனி தீர்த்துக்கொள்ளும்.

எனவே, ரஷிய அமெரிக்க மேல்நிலை வல்லரசுகளையும் அவர்களது அடிவருடிகளையும் அரைநிலைப் பிரபுத்துவ உறவுகளையும் பிற்போக்கு மதக் கோட்பாடுகளையும் போலி சோசலிச கோட்பாடுகளையும் ஓர் ஆயுதந்தாங்கிய புரட்சியின் மூலம் தூக்கியெறியும் போது மட்டுமே உத்திரவாதமான விடுதலையையும் அமைதியையும் ஆப்கன் மக்கள் அடைய முடியும்; அதற்கு இந்தியாவில் இருக்கிற நக்சல்பாரி கம்யூனிஸ்ட் கட்சி போன்ற ஒரு புரட்சிகர அமைப்பைக் கட்டி அதன் கீழ் அணி திரண்டு போராட வேண்டும்.

● பாலன்

ஆப்கான் கொரில்லாக்களால் தீக்கிரையாக்கப் பட்ட ரஷிய ஆக்கிரமிப்பு படையின் டாங்கி



படிப்பகம்

www.padippakam.com



# தடுப்புச் சுவர்

அலாவுதீனும் அற்புதவிளக்கும் கதையில் படித்திருக்கிறோம். பட்டணத்தில் பூதம், குட்டிச்சாத்தான் போன்ற சினிமாக்களில் பார்த்திருக்கிறோம்.

நேற்றுவரை புறக்கணிக்கப்பட்டு ஆமை வேகத்தில் முன்னேறியது சென்னை-மறைமலைநகர்த் திட்டம். முள்புதர்கள் காடுகளுக்கு நடுவே, ஆங்காங்கே சில வீடுகளும், தொழிற்சாலைகளும் மக்கள் வாழவே அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த பேய் நகரம்! ஒருமாதத்துக்குள் சகல வசதிகளும் பெற்று நவீன நகரமாக திடீரென்று ''மாயாஜால மந்திரத்தால்'' முளைத்து விட்டது.

உயர் வருமானப் பிரிவினருக்கான வீடுகள், அதுவும் குளுகுளுவசதி, அவசர மின்தேவைக்கு சிறு மின் உற்பத்தி இயந்திரங்களுடன் வரிசைவரிசையாக எழுந்து நிற்கின்றன. இரண்டு புது டிரான்ஸ்பார்மருடன் புது மின் இணைப்புகள். கார்கள் வழுக்கிக் கொண்டுபோகும் புதுச் சாலைகள். சென்னையிலிருந்து மறைமலைநகர் வரையிலான 45 கி.மீட்டர் சாலை அகலப்படுத்தி அவசர அவசரமாக செப்பனிடப்படுகிறது. எலிகாப்டர் விமானம் இறங்கும் தளம் அமைக்கப்படுகிறது. அங்கிருந்து சென்னைக்கும், டெல்லிக்கும் துரித-அதி நவீன தொலைத்தகவல் சாதனங்கள் நிறுவப்படுகின்றன. இவைத் தவிர பாதாள சாக்கடை உட்பட அனைத்து அடிப்படைத் தேவைகளும் மின்னல் வேகத்தில் பூர்த்தி செய்யப்படுகின்றன.

வழக்கமாக அதிகார வர்க்க சிகப்பு நாடாவுக்குள் சிக்கிக் கொண்டு ஆமை வேகத்தில் நகரும் அரசு நிறுவனங்கள் தான் இப்படி யுத்தமுனை வேகத்தோடு இயங்குகின்றன. எல்லாம் எதற்கு? ஏப்ரல் 22-24 தேதிகளில் மறைமலைநகரில் நடக்கும் காங்கிரசு மாநாட்டுக்காக கவர்னர் ஆட்சி ஏற்பாடு செய்யும் வசதிகள் தாம் இவை.



காங்கிரசு மாநாட்டிற்கு வரும் பாசிச ராஜீவ் கும்பலும் அதன் பரிவாரங்களும் தங்குவதற்குதான் குளுகுளுவசதியுடனான வீடுகள் மற்றும் பிற வசதிகள். ராட்சத எந்திரங்களைக் கொண்டு ஒரு பெரிய ஏரியை மூடுகிறார்கள். பெரும் பந்தல் போடுகிறார்கள். 100 தண்ணீர்த் தொட்டிகள், மருத்துவமனை, விடுதிகள் என்று சகலவசதிகளும் நிர்மானிக்கப்படுகின்றன.

அரசுப் பணத்தை வாரி இறைத்து பாசிச கும்பல் இப்படிக் கூத்தடிக்கும் அதேசமயம் அடிமட்ட மக்களுக்கு என்ன செய்கிறார்கள்? சாக்கடைகள் சூழ சேரிகளில் வாழும் மக்கள் இவர்கள் கண்களிலே படக்கூடாது என்பதற்காகத் திரைப் போடுகிறார்கள். ஆம்! சென்னையின் மைய இரத்தக் குழாய் போன்ற (மவுண்ட்ரோடு) அண்ணா சாலையில் இவர்களின் கண்களை உருத்திக் கொண்டிருக்கின்ற குடிசைப்பகுதிகள், அந்த மக்களுக்கு குடியிருப்புக்கள் கட்டிக்கொடுக்க வக்கில்லாத இவர்கள் நீளமான சுவர் எழுப்புகிறார்கள். உழைக்கும் மக்களின் அவல வாழ்வை சுவர்கட்டி மறைக்கிறார்கள்.

பாசிச ராஜீவ் கும்பலும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் வர்க்கங்களும் ஒருபுறம். அடிப்படை உழைக்கும் மக்கள் மறுபுறம். ஏற்கனவே வாழ்க்கையில் இந்த இரு பிரிவுகளுக்கும் இடையே இதைவிடப் பெருஞ்சுவர் எழும்பி இருக்கிறது. அதற்கு உருவம் கொடுப்பதுதான் இந்தத் தடுப்புச்சுவர்.

படிப்பகம்

www.padippakam.com

## விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்

# "ஒரு கம்யூனிச துரோகியின் மரணசாசனம்"

⑥

(சென்ற இதழின் தொடர்ச்சி)

❖ பிரிட்டிஷ் ஆட்சிகாலத்திய காங்கிரசு— சுயராஜ்யக்கட்சிகளின் தலைவர்கள் நேர்மையும் ஒழுக்கமும் நிறைந்த தேசபக்தர்கள், தியாக சீலர்கள் என்பதாகப் போலிக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திருவாளர் பி.ராமமூர்த்தி சித்தரிக்கிறார். அதற்கு மாறாக நீதிக்கட்சியின் தலைவர்கள் மிட்டா— மிராசுகள் ஜமீன்- நிலப்பிரபுக்கள், பதவிவெறியர்கள் தேச துரோகிகள் என்று குற்றஞ்சாட்டுகிறார்.

❖ திராவிட இயக்கத்தின் முன்னோடிகளான நீதிக்கட்சியின் தலைவர்கள் கொள்கைத் தங்கங்கள், லட்சிய அவதாரங்கள், வகுப்புரிமைப்போரில் பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராக வெற்றிக் கொடி காட்டிய வீரமறவர்கள். தமிழர்களைத் தட்டியெழுப்பிய பெரியோர்கள் என்பதாக சாதி அரசியல் நடத்தும் வீரமணி சித்தரிக்கிறார். அதற்கு மாறாக அன்றைய தமிழக காங்கிரசுத் தலைவர்கள் வர்ணாசிரம்ம அடிப்படையிலும் அரசு பதவிகளிலும் இருந்து கொண்டு திராவிட மக்கள் மீது ஆதிக்கம் செலுத்திய பார்ப்பணர்களும், இனதுரோகிகளும் தான் என்று குற்றஞ்சாட்டுகிறார்.

இவர்கள் இரண்டுபேருமே, வரலாற்றைத் திரித்துச் சொல்லி இன்றைய இளையதலைமுறையை ஏய்த்துவிட முயலுகிறார்கள். உண்மையில் காங்கிரசு—சுயராஜ்யக் கட்சிகள் மற்றும் நீதிக்கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் அத்தனைபேரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். அதிகாரவெறி—பதவிப்பித்து, சுயநலம்— அதிகார முறைகேடு — லஞ்ச ஊழல், தேர்தல் மோசடிகள் ஆகிய ஒட்டுக்கட்சித் தலைவர்களுக்குரிய குணங்களை இவர்கள் பொதுவாகப் பெற்றிருந்தார்கள் என்பதற்காக ஒரே குட்டையில் ஊறியமட்டைகள் என்று நாம் சொல்லவில்லை.

இன உரிமை, பார்ப்பண ஆதிக்க எதிர்ப்பு என்கிற லட்சியத்துக்கான திராவிட இயக்கமாக நீதிக்கட்சி ஒரு புறம், அகில இந்திய சுதந்திரம், காலனிய ஆதிக்க எதிர்ப்பு என்கிற லட்சியத்துக்கான தேசிய இயக்கமாக காங்கிரசு சுயராஜ்யக் கட்சிகள் இன்னொருபுறம் என்று எல்லைக்கோடு வரைந்து கொண்டு அரசியல் போராட்டம் நடத்திய இருவேறு அணிகள் அல்ல இவை. இரண்டு தரப்பிலுமே கட்சிமாறிகள்-பதவிக்காக சோரம் போன அரசியல் தலைவர்கள்தான் இருந்தனர். வசதிக்கேற்ப பதவி எச்சில் கிடைப்பதற்கேற்ப இந்த இருதரப்பில் எதற்கு வேண்டுமானாலும் தாவிக்கொண்ட தலைவர்கள் தான் இருந்தனர். காங்கிரசு— சுயராஜ்யக் கட்சிகள், நீதிக்கட்சி, லிபரல் கட்சிகள், காங்கிரசு ஜனநாயககட்சி, நீதி (ஜனநாயக) கட்சி, நீதி (சட்டபூர்வக்) கட்சி, சுயேட்சைக் கட்சி என்று வெவ்வேறு பெயர்களில் உருமாறிக் கொண்டே அதே பிரபலப் புள்ளிகள் தாம் இருதரப்பிலும் இருந்தனர். அவர்களில் யார், எந்தக் கட்சியில் எப்போது இருப்பது என்பதை அவர்களுக்குக் கிடைத்த அரசியல் ஆதாயங்கள் அதிகார எச்சில்களே தீர்மானித்தன.

காங்கிரசு— சுயராஜ்யக் கட்சிகளின் தலைமையிலிருந்த ராஜாஜி, சீனுவாச ஐயங்கார், சத்தியமூர்த்தி; நீதிக்கட்சியின் தலைமையிலிருந்த தியாகராய செட்டி, பனகல் ராஜா, முனுசாமி நாயுடு ஆகியவர்களும் அவர்களைச் சுற்றி இருந்த விசுவாசமான சிறுசிறு கும்பல்களும் மட்டும்தான் இருதரப்பிலும் பிரிந்து நின்றவர்கள். இந்தத் தலைவர்களும்கூட ''தமது லட்சியத்துக்காக பத்தினித்தனத்தைப் பாதுகாக்க வேண்டும்!'' என்று கருதிநடந்தவர்கள் இல்லை, தேசதுரோகிகள், மிட்டா மிராசுகள் ஜமீன் நிலப்பிரபுக்கள் என்று நீதிக்கட்சிப் பிரமுகர்களை தேசீயத் தலைவர்கள் ஒதுக்கி வைத்துவிடவும் இல்லை. பார்ப்பன ஆதிக்க சக்திகள், இனதுரோகிகள் என்று காங்கிரசு— சுயராஜ்யக் கட்சிப்பிரமுகர்களை (நீதி) திராவிடத் தலைவர்கள் வெறுத்துவிடவும் இல்லை. எதிரெதிர் தரப்பின் முக்கியப் பிரமுகர்களுக்கு வலைவீசினர், விலைபேசினர். கோஷ்டிச் சண்டையில் ஈடுபடுவது கட்சி தாவுவது கட்சிகளைப்பிளப்பது, பினாமிக்கட்சிகளை ஏற்படுத்துவது பதவி பேரங்கள் நடத்துவது ஆட்சிகளைக் கவிழ்ப்பது, சந்தர்ப்பவாதக் கூட்டணிகளை நிறுவுவது ஆகிய இன்றைய நாடாளுமன்றப் பித்தலாட்டங்கள் அத்தனையிலும் அந்தத் தலைவர்கள் முன்னோடிகளாக விளங்கினர்.

அருவெறுக்கத்தக்க கேளிக்கூத்துக்கள் பலவும், இதற்குச் சான்றாகத் தர முடியும். 1920 சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும், மைலாப்பூர்-எழும்பூர் பார்ப்பன கும்பல்களும், நீதிக்கட்சியும் களத்தில் குதித்தன. ஒவ்வொன்றும் தத்தமக்குத்தான் அதிக ஆதரவு இருப்பதாக்காட்டிக் கொள்வதற்காக நினைத்தவர்களுக்கெல்லாம் தேர்தல் வேட்பாளர் சீட்டுக்கொடுத்துத் தள்ளினர். ஒருவரே எல்லா குழுக்கள் சார்பாக சீட்டுப்பெறுவது சர்வ சாதாரணமாகி யார் எந்தக் கட்சி சார்பாகப் போட்டியிடுகிறார்கள் என்று தெரியாத அளவு குழப்பம் நிலவியது.

எனவே, தேர்தல் முடிவுகள் வந்ததும் சட்டமன்ற உறுப்பினர்களை விலைபேசுவதும் கட்சிதாவுவதும் தொடங்கிவிட்டன. அதுவரை மைலாப்பூர் கும்பலுடன் இருந்த ஏ.பி. பத்ரோ நீதிக்கட்சியின் மந்திரியானார். 1920 டிசம்பரில் ஒரு பெரிய காங்கிரசு மாநாட்டை நடத்திய பிரமுகர் டி.என் சிவஞானம் பிள்ளை 1923 இல் நீதிக்கட்சி மந்திரியானார். இராஜகோபாலச்சாரியின் நெருங்கிய சகாவாகவும் பிறகு காங்கிரசின் எழும்பூர் கும்பலுடைய பிரச்சாரகராகவும் இருந்த டாக்டர் பி.சுப்பராயன் நீதிக்கட்சி முதல் மந்திரியான பனகல் ராஜாவின் மந்திரிசபைச் செயலாளரானார். ''இந்தியாவில் அரசியல் கட்சி என்பது நடைமுறை சந்தர்பவாதத்தின் குழந்தை'' என்று 1920 லேயே என்.சுப்பிரமணிய அய்யர் என்ற எழுத்தாளர் எழுதினார்.

அதிகாரத்தைச் சுவைக்கத் தொடங்கியதும் நீதிக்கட்சிக்குள் கோஷ்டிச் சண்டைதீராத நோயாகத் தொற்றிக்கொண்டது. கட்சிக்குள் கோஷ்டிச் சண்டையைச் சமாளிப்பதில் கருணாநிதிக்கும்,


படிப்பகம்

www.padippakam.com

எம்.ஜி.ஆருக்கும் முன்னோடியாக விளங்கிய பனகல் ராஜா முதல் மந்திரியாக இருந்தார். போட்டிக் கோஷ்டியினரை ஒழித்துக்கட்டுவதற்காக அடிவெட்டு வேலைசெய்து தேர்தலில் அவர்களை வீழ்த்த முயன்றார் பனகல் ராஜா. அதற்காக 1923 தேர்தலில் சித்தூர் தொகுதியில் சி.ஆர். ரெட்டிக்கு எதிராக பி.முனுசாமி நாயுடுவை நிறுத்தினார். சென்னை நகரில் தமதுகட்சி எதிரிகளான டாக்டர் நடேசன், மதன கோபால் நாயுடு ஆகியோருக்கு நீதிக்கட்சியின் சீட்டுக்கிடைக்காமல் செய்தார். கோவையில் ராமலிங்கம் செட்டியை வீழ்த்துவதற்காக ஊத்துக்குளி ஜமீன்தாரின் மகனைப் போட்டியிடச் செய்தார். மந்திரிசபையிலிருந்த கே.வி.ரெட்டி நாயுடுவை ஓரங்கட்ட எண்ணி கோதவரியிலிருந்து கிருஷ்ணா தொகுதிக்கு மாற்றி சீட்டுக் கொடுத்தார்.

ஆனால் நடேசன் ரெட்டிநாயுடு, ராமலிங்கம் செட்டி போன்ற போட்டி நீதிக் கட்சியினர் வெற்றி பெற்றுவந்து பனகல் ராஜாவை பழிவாங்கத்துடித்தனர். தேர்தல் முடிவுவந்ததும் அவசர அவசரமாக விசுவாசமான கட்சி சட்டமன்ற உறுப்பினர் கூட்டத்தைக் கூட்டி தலைவராக மந்திரிசபை அமைத்துவிட்டார் பனகல் ராஜா. உடனே சி.ஆர். ரெட்டி தலைமையில் ஜனநாயக நீதிக்கட்சி என்ற புதிய கட்சி தொடங்கி தாங்கள் தான் உண்மையான பார்ப்பனர் அல்லாத இயக்கத்தவர் என்று கூறி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். பார்ப்பனர் அல்லாதவர் இயக்கம் என்று சொல்லிகொண்டே மைலாப்பூர் பார்பனக் கும்பலின் பெருந்தலைவர் சி.பி.ராமசாமி அய்யர் மற்றும் சட்டமன்ற தலைவராக நியமனம் பெற்றிருந்த பார்ப்பன அதிகாரி பி.ராஜகோபாலாச்சாரி ஆகியோருடன் இரகசியக் கூட்டுச் சேர்ந்தனர்.

ஓட்டுக் கட்சி அரசியலில் கைதேர்ந்தவராயிருந்த பனகல் ராஜா தனது அரசியல் திறமையைக் காட்டினார். நீதிக்கட்சியின் லட்சியங்களையெல்லாம் காற்றில் பறக்கவிட்டார். இந்து கஸ்தூரி ரெங்க ஐயங்காரின் ஆதரவைப் பெற்றதோடு மற்றொரு காங்கிரசு பத்திரிக்கையாளர் பணிக்கருக்கு சென்னை பல்கலைக் கழகப் பதிவாளர் பதவியளித்து இழுத்துக் கொண்டார். இப்படிப் பார்ப்பனர் அல்லாத தமது கட்சிக் காரர்களின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தமது எதிரிகளான பார்ப்பன, காங்கிரசார் மற்றும் ''தீவிரவாத'' முஸ்லீம் ஆதரவு பெற்று முறியடித்தார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு போட்டி நீதிக் கட்சியினரான நடேசன், ரெட்டி நாயுடு போன்றவர்களுக்கும் கட்சிப் பதவிகள் கொடுத்து இழுத்துக் கொண்டார். ஏனெனில் உள்ளூராட்சித் தேர்தல்கள் அப்போது வர இருந்தன.

1926 சட்டமன்றத் தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. நீதிக்கட்சி மந்திரி சபை அமைக்க முடியாது என்று தெரிந்ததும் அதுவரை பனகல் ராஜாவின் நெருங்கிய கூட்டாளியாக இருந்த எம். கிருஷ்ணன் நாயர் கவர்னர் மாளிகைக்கு ஓடிப்போய் ''என்னை மந்திரியாக நியமிக்கும் எண்ணம் உங்களுக்கு இருந்தால் நான் நீதிக்கட்சியில் இருப்பது தடையாக இருக்குமா?'' என்று கேட்டார். அதாவது பதவிக்காகக் கட்சி மாறத் தான் தயார் என்று கவர்னரிடம் அப்பட்டமாக கூறினார்.

அதிகார எச்சிலுக்காக நீதிக்கட்சிக் காரர்களின் நாவில் நீர் ஊறியது. குழப்பமும் அதிகார மோகமும் மேலோங்கியது. கவர்னரையும் இரட்டை ஆட்சி முறையையும் தாக்கினர். 1927 ஜூன் கோவை நீதிக் கட்சியின் மாநாட்டில், கவர்னரைத் திருப்பி அழைக்கும்படியும், ராமசாமி ஐயரின் அதிகாரத்தை பறிக்கும்படியும் கோரினர். இரட்டையாட்சி முறை இருக்கும் வரை பதவி எதுவும் ஏற்கப் போவதில்லை என்று சவடால் அடித்தனர். காங்கிரசில் சேருவது பற்றிக்கூட விவாதித்தனர். கட்சி விழாக்களில் பனகல்ராஜா காந்தியின் படங்களைத் திறந்து வைத்தார்.

அதிகாரப் பங்கு கிடைக்காத பலருக்கும் அரிப்பெடுக்கத் துவங்கியது. காங்கிரசு 'தியாகி' சத்தியமூர்த்தி அடிக்கடி கவர்னர் மாளிகைக்குக் காவடி தூக்கினார். கிறிஸ்துமஸ் பரிசுகள் வழங்கினார். இவற்றின் மூலம் மந்திரி பதவியிலிருந்து ''சேவை செய்யத் தயாராய் இருப்பதாக தெரிவித்தார்'' (ஆதாரம்: கவர்னர் கோஷேன் தாள்கள்). சுயராஜ்யக் கட்சியின் தஞ்சை சட்டமன்ற உறுப்பினர் எஸ். முத்தையா முதலியார் ஒரு தனிக் காங்கிரசுக் கும்பலைக் கட்டினார். கே.வி. ரெட்டி நாயுடு நீதி (சட்டவாதக்) கட்சியை நிறுவினார். —இவற்றின் மூலம் கவர்னரிடம் தமது விசுவாசத்தைத் தெரிவித்தனர்.

> **தேச துரோகிகள், மிட்டாமிதாசுகள் ஜமீன் நிலப்பிரபுக்கள் என்று நீதிக்கட்சிப் பிரமுகர்களை தேசியத் தலைவர்கள் ஒதுக்கி வைத்துவிடவும் இல்லை. பார்ப்பன ஆதிக்க சக்திகள், இனதுரோகிகள் என்று காங்கிரசு- சுயராஜ்யக் கட்சிப் பிரமுகர்களை (நீதி) திராவிடத் தலைவர்கள் வெறுத்துவிடவும் இல்லை. எதிரெதிர் தரப்பின் முக்கியப் பிரமுகர்களுக்கு வலைவீசினர், விலைபேசினர். கோஷ்டிச் சண்டையில் ஈடுபடுவது, கட்சி தாவுவது, கட்சிகளைப் பிளப்பது, பினாமிக்கட்சிகளை ஏற்படுத்துவது, பதவி பேரங்கள் நடத்துவது, ஆட்சிகளைக் கவிழ்ப்பது, சந்தர்ப்பவாதக் கூட்டணிகளை நிறுவுவது ஆகிய இன்றைய நாடாளுமன்றப் பித்தலாட்டங்கள் அத்தனையிலும் அந்தத் தலைவர்கள் முன்னோடிகளாக விளங்கினர்.**

அப்போது மைலாப்பூர் பார்ப்பனக் கும்பலின் பெருந்தலைவர் சி.பி. ராமசாமி ஐயர், ''திறமையாளர்களின் மந்திரிசபை'' அமைக்க முன்வந்தார். பரம எதிரியாகக் கருதிய அவருடன் கூட்டுச் சேர பனகல் ராஜா மறுத்துவிட்டார். காங்கிரசு-சுயராஜ்யக் கட்சி மந்திரிசபையில் பங்கேற்காவிட்டாலும் மறைமுக ஆதாயம் பெறவும், செல்வாக்கு செலுத்தவும் ஏதுவான வகையில் ஒரு சுயேச்சையான மந்திரிசபையை உருவாக்கினார் ராமசாமி ஐயர். ராஜாஜியின் நெருங்கிய கூட்டாளியான காங்கிரசுக் காரராக இருந்தவரும், சேலம் நிலப்பிரபுவும், நீதிக் கட்சிக்குத் தாவி கொறடாவானவரும், கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதியும் ஆன டாக்டர் சுப்பராயன் முதல் மந்திரியானார். ஆற்காடு ரெங்கநாத முதலியாரும், ஆர்.என். ஆரோக்கியசாமி முதலியாரும் மற்ற இரு மந்திரிகளாயினர். ராமசாமி ஐயர் பின்னாலிருந்து இயக்கினார்.

அதற்குள் பதவிப் போட்டியின் காரணமாக சுப்பராயனின் ''சுயேச்சை'' மந்திரிசபை ஆட்டங்காணவே அது நீடிக்காது என்று கணித்த ராமசாமி ஐயர் வேறு பதவி தேடி டெல்லிக்கு ஓடிப் போனார். இதுதான் சமயமென்று காத்திருந்த பனகல் ராஜா, சுப்பராயன் மந்திரிசபைக்கு முட்டுக் கொடுத்துத் தம் பக்கம் சாய்த்துக் கொள்ளும் வேலையில் இறங்கினார். மந்திரி பதவி ஆசை காட்டி தஞ்சை எஸ். முத்தைய முதலி



படிப்பகம்

www.padippakam.com

யாரைக் காங்கிரசிலிருந்து கட்சித் தாவச் செய்தார். சென்னை மாநகராட்சியில் மேயர் பதவி தருவதாக உறுதிகூறி சுயராஜ்யக் கட்சியின் மற்றொரு பிரிவை இழுத்தார். அதன் பிறகு திருச்சி நீதிக் கட்சியினருடன் ஏற்கனவே நெருக்கமாகக் கூடிக் குலாவியவரும் சுயராஜ்யக் கட்சிக்காரருமான சேதுரத்தினம் ஐயரையும் கட்சி தாவச் செய்தார். இவரையும் முத்தையா முதலியாரையும் கொண்டு சுப்பராயன் மந்திரிசபை திருத்தி அமைக்கப்பட்டது.

1928-ல் பிரபல அரசியல் மோசடிக்காரரான பனகல் ராஜா இறந்த பிறகு ஒன்பது கோஷ்டிகள் உருவாகி தலைமைக்குப் போட்டியிட்டனர். முனுசாமி நாயுடு தலைமையிலான 'முற்போக்கு' குழு என்று சொல்லிக் கொண்ட குழு; 'சட்டவாதி'களைக் கொண்ட ரெட்டி நாயுடு குழு, பொப்பிலி ராஜா தலைமையிலான சர்க்கார் மாவட்டங்களின் பண்ணையார் குழு, அதிகாரப்பூர்வ கட்சி அமைப்பைக் கட்டுப்படுத்திய மதுரை பி.டி. ராஜன் குழு ஆகிய நீதிக்கட்சி கோஷ்டிகள்.மந்திரிசபையில் சேருவதற்காக சுயராஜ்யக் கட்சியிலிருந்து கட்சி தாவிய முத்தையா முதலியார், பனகல் ராஜா முதல் காந்தியவாதிகள் வரை எல்லோருடனும் கூடிக் குலாவிய- சமீபகாலம் வரை சுயராஜ்யக் கட்சித் தலைவரும் சென்னை பெரும் வியாபாரியுமான சாமி வெங்கிடாசலம் செட்டி போன்றவர்களைக் கொண்ட சுப்பராயன் குழு, இவை தவிர மந்திரிசபை அமைப்பதில் வெளியிலிருந்து பேரம் பேசிய சத்தியமூர்த்தி தலைமையிலான காங்கிரசு ஜனநாயகக் கட்சி இவர்கள் அத்தனை பேரும் பதவிக்காக நாயாய் அலைந்தார்கள்.

கட்சிகளைப் பிரிக்கும் எல்லைக் கோடுகளைத் தாண்டி தனிப்பட்ட அரசியல்வாதிகள் சர்வசாதாரணமாகப் போய் வந்தனர். 1920-க்குள் முழுக்க சாமி வெங்கடாசலம் செட்டி எல்லா கட்சிகளுக்கும் இடையே மிதந்தார் சுயராஜ்யகாரராகவும் சுயேச்சையாகவும் இவர் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் நீதிக்கட்சித் தலைமைக்குப் போட்டியிட்டார். சென்னை மாநகராட்சி பதவியின் மேல் மோகங்கொண்ட இவர் தீவிர காங்கிரசார் மற்றும் நீதிக்கட்சித் தலைவர்களின் ஆதரவை அடுத்தடுத்த ஆண்டுகளில் பெற்று வெற்றியடைந்தார். கோவையில் வங்கி மற்றும் தொழிலதிபர் ஆர்.கே. சண்முகம் செட்டி, 1920க்கு முன்பு காங்கிரசிலிருந்தார். 1920 தேர்தலை காங்கிரசு புறக்கணித்த போதும் இவர் போட்டியிட்டார்; உடனே நீதிக்கட்சியில் சேர்ந்து பனகல் ராஜாவின் சட்டமன்ற செயலாளரானார். அவரிடமிருந்து வேறுபட்டு விலகிய சண்முகம் செட்டி 1923-ல் மேற்கு வங்க காங்கிரசுத் தலைவர் சி.ஆர். தாசின் சுற்றுப்பயணத்திற்கு ஏற்பாடு செய்தார். அதைப் பயன்படுத்திக் கொண்டு தனிக்கட்சி கட்ட முயன்றார். அதில் தோற்றுப்போன பிறகு நீதிக்கட்சிக்குத் திரும்பினார். 1925-ல் சுயராஜ்ய கட்சிக்குத் தாவி சீட்டு பெற்று டெல்லி சட்டமன்றத்திற்குப் போனார். சென்னை சுயராஜ்யக் கட்சித் தலைவர் எஸ். சீனிவாச ஐயங்காருடன் வேறுபட்டு விலகி ''மிதவாத'' கோஷ்டிக்குப் போனார். பிறகு மீண்டும் நீதிக்கட்சிக்குத் தாவி சீட்டு பெற்று 1930-34 தேர்தல்களில் வெற்றி பெற்றார்.

சாமி வெங்கடாசலம் செட்டி, சண்முகம் செட்டி போன்றவர்கள் பலர் அன்றைய அரசியல் தலைவர்கள். ஆகவே, தேசியம் கிடையாது, திராவிடம் கிடையாது, பதவிதான் அவர்களது இலட்சியம். அன்றைய பிரபலத் தலைவர்களுள் ஒருவரான சி.ஆர். ரெட்டி எழுதினார்: ''ஒரு வகையில் நாங்கள் எல்லோரும் தேசியவாதிகள்தான்''. இன்னொரு தலைவர் எஸ். குமாரசாமி ரெட்டி சொன்னார், ''நாங்கள் எல்லாம் பதவி வேட்டைக்காரர்கள்.''

இன்னும் பல மாவட்ட வாரிய உறுப்பினர்கள் போன்ற பல பதவிகளை பார்ப்பனர்களுக்கு பனகல் ராஜா வழங்கினார்.

நீதிக்கட்சிக்கு ஒரு பனகல் ராஜா என்றால் காங்கிரசு சுயராஜ்ய பார்பன கும்பலுக்கு சத்தியமூர்த்தி- ராஜாஜி ஆகிய இரண்டு அரசியல் மோசடிப் பேர்வழிகள் இருந்தனர். 1920 தேர்தலில் தேர்தல் வாய்ப்பை இழந்த காங்கிரசை மீண்டும் பதவி வேட்டைக்காக இழுக்க முயன்றார் சத்தியமூர்த்தி. சுயராஜ்ய கட்சி தொடங்கியதும் நீதிக்கட்சியிலிருந்து பிரபல புள்ளிகளை இழுக்கத் துவங்கினர். பனகல் ராஜாவிற்கு போட்டி கோஷ்டியிலிருந்து, ஜனநாயக நீதிக்கட்சி துவங்கி ஆட்சிக்



கவிழ்ப்பிற்கு முயன்று தோற்றுப் போன பிறகு சி.ஆர். ரெட்டி, சத்திய மூர்த்தியோடு கூட்டுச் சேர்ந்தார். பனகலைப் பகைத்துக் கொண்ட டி.ஏ. ராமலிங்க செட்டியையும் இழுத்துப் போட்டார். பனகலின் நெருங்கிய ஆலோசகர் ராமசாமி முதலியாருக்குக்கூட பேரம் பேசினார். சுயேச்சைக் கட்சியின் சட்டமன்றத் தலைவர் சி.வி.எஸ். நரசிம்மராஜ், சர்வகட்சிப் பிரமுகர் சாமி வெங்கடாசலம் செட்டி ஆகியோரோடு சேலம் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, ஆந்திரா ஏ. காளீஸ்வரராவ் மற்றும் கொண்டா வெங்கடப்பையா ஆகிய பழைய காங்கிரசாரையும் சேர்த்து ஒரு கோஷ்டி அமைத்தார் சத்தியமூர்த்தி.

1926 தேர்தலுக்குப் பிறகு மந்திரிசபையில் சேர காங்கிரசு அனுமதி மறுத்து விடவே இந்த பிரபலங்கள் எல்லாம் அப்படியே கட்சி தாவின. சுப்பராயன் தலைமையிலான சுயேச்சை மந்திரி சபையில் பதவியைப் பிடிப்பதற்காக சுயராஜ்ய கட்சியை விட்டு ஓடினர் பனகல் ராஜா மூலம் பதவி வேட்டையிலிறங்கினர் 1930-ல் ஏறக்குறைய இதே நபர்களைக் கொண்ட அதாவது பழைய சுயராஜ்யக் கட்சி மற்றும் நீதிக் கட்சியில் இருந்து கட்சி தாவியவர்களைக் கொண்ட ஒரு தேசியக் கட்சியை உருவாக்கி மீண்டும் ஆள் பிடிக்கும் வேலையில் இறங்கினார் சத்தியமூர்த்தி.

அதற்குள் காங்கிரசிற்குள் மூன்று கோஷ்டிகள் தோன்றி விட்டன. குமாரசாமி ராஜா, நாகேஸ்வரராவ், டி.எஸ் எஸ். ராஜன் போன்றோர் அடங்கிய ராஜாஜி தலைமையிலான ஒரு குழு; முத்துரங்க முதலியார், சாமி வெங்கடாசலம் செட்டி, சி.ஆர். ரெட்டி போன்றோர் அடங்கிய சத்தியமூர்த்தி தலைமையிலான ஒரு குழு; காங்கிரசிற்குள் புதிதாக நுழைந்த என்.ஜி. ரங்கா மற்றும் வி.வி. கிரி அடங்கிய குழு இவைகள் தவிர சாமுவேல் ஆரோன், அவனாசிலிங்க செட்டி, ராமலிங்கம் செட்டி, அனந்த சயனம் அய்யங்கார் போன்ற தனிநபர்களும் காங்கிரசு மூலம் பதவி வேட்டையில் இறங்கியவர்கள். 1930-ம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல் சூடுபிடிக்க, காங்கிரசு தீவிரமாக தேர்தல் களத்தில் குதித்ததும், நீதிக்கட்சி நீரில் மூழ்கும் கப்பலாக செல்வாக்கு இழந்ததும் பிரபல அரசியல் தலைவர் அனைவரும் காங்கிரசிற்குப் படையெடுத்தனர். குறிப்பாக சென்னை மாநகராட்சியில் முக்கிய புள்ளிகளாயிருந்த நீதிக்கட்சி பிரமுகர்கள் வி. சர்க்கரை செட்டி, ஜி. செல்வபதி


படிப்பகம்

செட்டி மற்றும் வைர வியாபாரி லால் தாஸ்கோவின் தாஸ் ஆகியோர் காங்கிரசு குல்லாய் போட்டுக் கொண்டனர்.

கட்சி மாறிகளும் காரியவாத சுயநலமிகளும், பதவி வேட்டைக்காரர்களும், பெரும்பணக்காரர்களும் திடீரென்று காங்கிரசின் மீது மோகங் கொண்டது போல வந்து குவிவது கண்டு பல அடிமட்டத் தொண்டர்கள் பொறுமினர். வெளிநாட்டு துணி வியாபாரம் நடத்திய ஒரு பம்பாய் கம்பனியின் துபாஷியாக இருந்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' முதலாளியான ராம்நாத் கோயாங்கோ, நீதிக்கட்சியின் புரவலரும் மிகப்பெரும் வியாபாரியுமான கே. வெங்கடாசலம் நாயுடு போன்றவர்களுக்கு சென்னையில் சீட்டு கொடுக்கப்பட்டது. பெரும் செல்வந்தர் என்று மட்டுமே பிரபலமாக இருந்த உப்புத்துரி ராமராவ், பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு பரிசுகள் அனுப்புவதே பழக்கமாகக் கொண்டிருந்த வி.வி. புன்னையா போன்றவர்களுக்கு ஆந்திராவில் காங்கிரசு சீட்டு கொடுத்தது.

தேர்தல் நெருங்க நெருங்க இது அதிகரித்தது. போட்டி வேட்பாளர்களுக்கு விலை பேசினர். பல இடங்களில் போட்டியின்றி காங்கிரசு புள்ளிகள் வென்றனர். பதவி ஆசை காட்டி பலரையும் இழுத்துப் போட்டனர். பத்தாண்டுகளாக நீதிக்கட்சி சட்டமன்ற உறுப்பினராயிருந்த சராபா ரெட்டி நீதிக்கட்சி வேட்பாளராக கர்நூல் மாவட்ட வாரியத்திற்கு நின்று வெற்றி பெற்ற எட்டு பேரோடு கட்சி தாவினர். அவருக்கு மாவட்ட வாரிய துணைத் தலைவர் பதவி கொடுத்தனர். அதே போல ஆறு நீதிக்கட்சி உறுப்பினர்களுடன் கட்சி தாவியவர், அனந்தப்பூர் மாவட்ட வாரிய துணைத்தலைவர் ஆனார். பொப்பிலி ராஜாவுடன் சுற்றியவரும் திருநெல்வேலியில் மிகப் பெரிய வியாபாரியுமான எம்.டி.டி. குமாரசாமி முதலியார் மாவட்ட வாரியத் தேர்தலில் காங்கிரசுக்கு எதிராகப் போட்டியிட்டு வென்ற சில நாட்களிலேயே காங்கிரசுக்குக் கட்சிதாவி வாரியத் தலைவரானார். சித்தூர் மாவட்ட வாரியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சி.ஆர். ரெட்டி பதவி விலகி ஆந்திரா பல்கலைக்கழகத் துணைவேந்தரானார். உடனே வி. ரகுநாத ரெட்டி மற்றும் அவருடைய எதிரியான ராமகிருஷ்ண ரெட்டி ஆகிய இரு நீதிக்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவி மாவட்ட வாரியத் தலைவர் பதவி கோரினர். ராமகிருஷ்ண ரெட்டிக்குப் பதவி கிடைக்கவே ரகுநாத ரெட்டி மீண்டும் கட்சி தாவி காங்கிரசுக்கு எதிராக வேலை செய்தார். இதுதான் சமயம் என்று முதன் மந்திரி முனிசாமி நாயுடுவின் நெருங்கிய நீதிக்கட்சிக்காரர் காங்கிரசுக்கு ஓடி மாவட்ட வாரியத் துணைத் தலைவரானார்.

**ஏப்ரல் 22; உலகம் முழுவதும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் அன்புத் தலைவன் லெனின் பிறந்தநாள்**

புத்துலகச் சிற்பியே, புரட்சிப் புயலே!

அடிமை விலங்கொடித்து ஆர்த்தெழுந்த ரஷ்ய சோசலிசப் புரட்சியின் நாயகனே,

உனது 119வது பிறந்த நாளில்,

பாசிசம் படர்ந்துவரும் இருண்ட இந்தியாவில் ஒளிவிளக்காகத் திகழும் மார்க்சிய- லெனினியப் புரட்சியாளர்களின் தலைமையில் அணிதிரண்டு,

எல்லா வண்ண சந்தர்ப்பவாதிகளையும் தோலுரித்து,

ஆயிரமாயிரம் தியாகிகளின் உதிரத்தால் சிவந்த புரட்சிப் பாதையில் தடம் புரளாமல் தொடர்ந்து முன்னேற சூளுரைக்கிறோம்!

மார்க்சிய- லெனினிய- மாசேதுங் சிந்தனை ஓங்குக!

www.padippakam.com

திருச்சி அரசியல் அன்றைய தலைவர்களின் யோக்கியதைக்குச் சான்றாக விளங்கியது. 30 ஆண்டுகளாகத் தீவிர காந்தியவாதியாகவும், ராஜாஜியின் வலதுகரமாகவும் இருந்த திருச்சி பெரும் பணக்காரர் டி.எஸ்.எஸ். ராஜனுக்கு காங்கிரசு சீட்டு மறுக்கப்பட்டது. நீதிக்கட்சியுடன் கூடிக்குலாவிய சர்வகட்சிப் பிரமுகரும், வக்கிலும் செல்வந்தருமான பி. ரத்தினவேலுத் தேவருக்கு சீட்டுக் கொடுக்கப்பட்டது. முஸ்லீம்களுக்கு எதிராக வகுப்பு வெறியைத் தூண்டிய கள்ளர்சாதித் தலைவர் இவர். 1933இல் அதிகார முறைகேடுகளுக்காக திருச்சி நகரசபைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டவர். காங்கிரசில் சேர்ந்தவுடன் திருச்சி- ஸ்ரீரங்கம் சட்டமன்ற இடைத்தேர்தலில் சீட்டுக் கொடுத்தனர். உடனே திருச்சி மாவட்ட வாரியத் தலைவராகவும் ஆக்கினர். அடுத்த ஆண்டு திருச்சி நகரசபைத் தேர்தலுக்குப் பிறகு அதன் தலைவர் பதவிக்கும் போட்டியிட்டார். தேவர், ராஜன் மற்றும் இரு கோஷ்டிகள் போட்டியிட்டன. இன்று நாம் காணும் எல்லா தேர்தல் தில்லு முல்லுகளையும் விஞ்சிவிடும் மோசடிகள், தகிடுதத்தங்கள் நடந்தன. ராஜன் கோஷ்டியின் வேட்பாளர் வெற்றி பெற்றார்; அதிகாரபூர்வ காங்கிரசு வேட்பாளரான தேவர் தோற்றுப் போனார். வெறுப்புற்ற ராஜாஜி "காந்திய வாதியான ராஜன் கூட இப்படிச் செய்யுமளவு காங்கிரசு சீரழிந்து போனதே" என்று "வேதனைப்பட்டு" காங்கிரசை விட்டே விலகினார். பிறகு அகில இந்திய தலைமை தலையிட்டு சமரசப்படுத்தினர். ராஜாஜியும், ராஜனும் காங்கிரசுக்குத் திரும்பினர். ஆனால் தேவரின் மதிப்புக் குறைந்துவிடவில்லை. அடுத்த தேர்தலில் திருச்சி தொகுதியில் போட்டியிட்டு வென்றார்.

அப்போது வந்த சட்டமன்றத் தேர்தலில் பழைய நீதிக்கட்சிப் பெருச்சாளிகளே காங்கிரசு சார்பாகப் போட்டியிட்டனர். சி.எஸ். ரத்தினசபாபதி முதலியார், ராமலிங்கம் செட்டி, வெள்ளிங்கிரி கவுண்டர், பழைய கோட்டை பட்டக்காரர் போன்றவர்களைத் தேடிப் பிடித்துத் தேர்தலில் நிறுத்தினர். சாதி, ஜமின் செல்வாக்கு, பணபலம் ஆகியவற்றைக் காட்டி இந்தக் கும்பல் வெற்றி பெற்றது. கோஷ்டிசண்டை, அதிகார முறைகேடு, லஞ்ச ஊழல் ஆகியவற்றால் ஏற்கனவே கரைந்துபோயிருந்த நீதிக்கட்சி முற்றாக மறைந்தது. "இப்போதைய காங்கிரசு ஒரு ஒருங்கிணைந்த அமைப்பு அல்ல. சமீபகாலம் வரை அவர்களில் பலரும் நீதிக்கட்சிக்காரர்களாகவோ, (மைலாப்பூர்) லிபரல்களாகவோ இருந்தவர்கள்தான்!" என்று அப்போதைய கவர்னர் எர்ஸ்கின் வைஸ்ராய்க்கு எழுதினார்.

காங்கிரஸாரின் அரசியல் பித்தலாட்டங்கள் இன்னும் அப்பட்டமாகத் தெரிந்தது 1952 தேர்தல் முடிந்ததும் தான். எந்தக்கட்சியும் பெரும்பான்மை பெறாத நிலையில் கவர்னர் ஜெனரலாகி, பிறகு மேற்கு வங்க கவர்னராக இருந்த ராஜாஜியைக் கூப்பிட்டார்கள். அவர்தானே கைதேர்ந்த அரசியல் மோசடிப் பேர்வழி! மாணிக்கவேலர், ராமசாமி படையாச்சி போன்ற சாதித் தலைவர்களின் சில்லறைக் கட்சிகளையும் சுயேச்சைகளையும் விலைபேசி வாங்கி கூட்டு மந்திரி சபை அமைத்தார். அப்போது எதிர்க்கட்சியாயிருந்த 'கம்யூனிஸ்டு' கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தபோது ஒரு ஓட்டு வித்தியாசத்தில் தீர்மானம் தோற்றுப் போனது! அந்த ஒரு ஓட்டுக்குரிய இதே பி. ராமமூர்த்தி அந்தச் சமயத்தில் காஷ்மீருக்குப் போய் இருந்து கொண்டார். நேரு அனுப்பிவைத்த "தேசியப்" பணிக்காக காஷ்மீர் போனதாக ராமமூர்த்தி சொல்கிறார். எப்படியோ ராஜாஜி மந்திரிசபை காப்பாற்றப்பட்டது!

(தொடரும்)

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-600 015.
... 107-எ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை-600 094

படிப்பகம்

www.padippakam.com

இந்திய நாட்டு ராணுவத்தின் பழம்பெரும் துணை ராணுவ அமைப்பான அசாம் துப்பாக்கி படைபிரிவின் ராணுவ 'வீரர்'கள் இவர்கள். அசாம் துப்பாக்கி படையின் 123வது ஆண்டு நிறைவு தினத்தைக் கொண்டாடும் வகையில், நாட்டின் வடகோடியில் உள்ள அருணாசல பிரதேசத்திலிருந்து தென்கோடி கன்யாகுமரிவரை பாத யாத்திரை மேற்கொண்டவர்கள். ''நாம் அனைவரும் ஒருவர்'' என்று பெரிய எழுத்துக்கள் பொறித்த பனியனை அணிந்துக் கொண்டு தங்கள் பயணத்தின் வழிநெடுக தேச ஒற்றுமை, ஐக்கியம், சகோதரபாசம் இவற்றின் அவசியத்தை மக்களுக்கு எடுத்துரைத்துக் கொண்டே அமைதிவழி யாத்திரை நடத்தியவர்கள், விவேகானந்தரின் பாறையோடு தங்கள் பயணத்தை முடித்துக் கொண்டார்கள்.



# இதுதான் இன்றைய இந்தியா

இதோ, ''நாம், அனைவரும் ஒருவர்'' என்று நரித்தனமாக பிரச்சாரம் மேற்கொண்டவர்கள், தங்கள் உரிமைக்காக போராடும் மக்களை வேட்டையாட காடுகளில் தேடுதல் வேட்டை நடத்துகிறார்கள். இத் துணைராணுவ கும்பலின் ஒரு பிரிவு இங்கு அமைதி வழி யாத்திரை நடத்திக் கொண்டிருக்கும்போது அதன் மற்றொரு பிரிவு, மிஜோரம் ஐஸ்வால் பகுதியில் பொது மக்களின் மீது கண்மூடித்தனமாக சுட்டது. நிரந்தரமாகவே அப்பகுதியில் தங்கி, சமூக விரோத நடவடிக்கையில் ஈடுபடும் அப்படை பிரிவுக்கும் பகுதி வாழ் மக்களுக்கும் நிரந்தர பகை. இதன் வெளிப்பாடாக கிளம்பிய பகுதி மக்களின் எதிர்ப்பைக் கண்டு எரிச்சல் அடைந்த அப்படை பிரிவு அதற்கு எதிராக பகுதிமக்களை பழிவாங்கியது. 2 அசாம் போலீஸ் உட்பட 10க்கும் மேற்பட்ட பொதுமக்களை சுட்டுக் கொன்றது. 50க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.



அசாம் துப்பாக்கி படையின் பழம் பெரும் பாரம்பரியமே இதில்தான் அடங்கியுள்ளது. மிஜோ, நாகா, மணிப்பூர் என வடக்கிழக்கு இந்திய மாநிலங்களில் பீறிட்டு எழும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை கொலைவெறியோடு அடக்கு ஒடுக்குவதற்காகவே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் முதன்முதலாக தனிச்சிறப்பாக அமைக்கப்பட்டது. பட்டபகலில், நள்ளிரவில், வீடுபுகுந்து கண்ணில் கண்டவர்களை இழுத்துச் செல்வது, படுகொலை புரிவது, பெண்களை மொத்தமாக சேர்ந்து கற்பழிப்பது, அவர்களின் சொற்ப உடமைகளை திருடிச் செல்வது, தீயிட்டு கொளுத்துவது என சொந்த மக்களை கொடிய மிருகமாக சுற்றி வளைத்து தாக்குவதுதான் இப்படையின் பிரதான வேலை.

நாட்டு பாதுகாப்பு என்ற பெயரில், உழைக்கும் மக்களின் வரிப்பணத்தை தின்று கொழுத்து நாளும் ஊதிப்பெருத்து, சொந்த மக்களையே கடித்துக் குதறும் இந்த கூலிப்படையை ஒழித்துக்கட்டுவது எப்போது?

படிப்பகம்